Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 பங்குனி-11 24-03-2005 வியாழக்கிழமை ஓசை 34



உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்

R.V.பந்தல் சேவை

முல்லைச்சாலை, தருமபுரம். T.P:0712-610008 (சி-11459) விநாயகர் வீதி, மயிலிட்டி.

- வவுனியா சாஸ்திரி கூழாங்குளத்தில் -

# இளைஞன் மீது ராணுவத்தினர் தாக்குதல்

# மக்கள் ஆட்சேபத்தால் எழுந்த முறுகல்!

## கண்காணிப்புக்குழுவின் தலையீட்டால் தணிவு

(செட்டிகுளம்)

**வவுனியா சாஸ்திரி கூழாங்குளம் பகுதியில் இளைஞர் ஒருவர் இராணுவத்தால் படுமோசமாகத் தாக்கப்பட்டதை அடுத்து இராணுவத்தினருக்கும், மக்களுக்கும் இடையில் நேற்றுக் காலை முறுகல் நிலை ஏற்பட்டது. போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் தலையீட்டின் பின்னர் நிலமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.**

நேற்றுக் காலை 9 மணியளவில் ஈச்சங்குளம் பகுதியில் இருந்து வவுனியா நோக்கி துவிச்சக்கரவண்டியில் சென்று கொண்டிருந்த 25 வயதான கரன் என்பவர் அதே திசையில் வீதி ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்து இராணுவத்தினரின் துவிச்சக்கரவண்டியுடன் விபத்துக்குள்ளாகியுள்ளார். இதனை அடுத்து இராணுவத்தினர் மேற்படி இளைஞனை 30 மீற்றர் வரை வீதியில் போட்டு உருட்டி சரமாரியாகத் தாக்கியுள்ளனர். இதனால் இளைஞன் கடுமையான காயங்களுக்கு உள்ளாகியுள்ளார். அத்துடன் இளைஞனை தமது கல்மடு இராணுவ முகாமுக்கு கொண்டு செல்வதற்கு முயற்சி செய்த வேளையில் மக்களுக்கும் இராணுவத்தினருக்கும் முறுகல் நிலை ஏற்பட்டது. பொலிசார் தருவிக் கப்பட்டு விசாரணை மேற்கொள்ள வேண்டும். போர் நிறுத்தக்கண்காணிப்புக் குழுவினர் அங்கு வந்து விசாரணை

(12ஆம் பக்கம் பார்க்க)

## உந்துருளியில் சென்றவர்மீது பொலிசார் துப்பாக்கிச்சூடு

### அக்கரைப்பற்றில் சம்பவம்

அக்கரைப்பற்றுப் பிரதேசத்தில் பொலிசார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயமடைந்துள்ளாரென அம்பாறை மாவட்டத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சரத் விஜயசுந்தர தெரிவித்துள்ளார்.இச் சம்பவம் தொடர்பாக மேலும்அவர் தெரிவிக்கையில் நேற்று மாலை அக்கறைப்பற்று பிரதானவீதியில் பயணித்த உந்துருளி ஒன்றைப் பொலிசார் சோதனைச்சாவடியில் நிறுத்துமாறு சமிக்ஞை செய்ததாகப் பொலி சார் தெரிவித்துள்ளனர். இதனைத்தொடர்ந்து உந்துருளியின் ரயர் மீது இலக்கு வைத்து துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்ட போதிலும் அதில் பயணித்தவரின் காலில் துப்பாக்கிக்குண்டு பாய்ந்ததென எனக்கு அறிவிக்கப்பட்டது. இதேவேளை பொலிஸ் சோதனைச் சாவடியில் பொலிசார் தம்மை நிறுத்துமாறு சமிக்ஞை செய்ததைத்தாம் காணவில்லையென உந்துருளியில் சென்றவர் தெரிவித்ததாக பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

## அரசியலமைப்புச் சபையின் ஆயுட்காலம் முடிவு

அரசியல் அமைப்புச்சபையின் ஆயுட் காலம் நேற்றுடன் முடிவடைந்தது. அரசியலமைப்புச் சபை மூன்றுவருட கால ஆயுளைக் கொண்டது. இதில் பிரதமரும், எதிர்க்கட்சி தலைவரும், சபாநாயகரும் முக்கிய மூன்று உறுப்பினர்களாவர்.அத்துடன் அவர்கள் ஆலோசனை மேற்கொண்டு ஐந்துஉறுப்பினர் களை நியமிக்க உரிமைகொண்டுள்ளனர். அதே

(12ஆம் பக்கம் பார்க்க)

## மாணவர்கள் போராட்டங்களில் ஈடுபடுவது குறித்து விளக்கங் கோருகிறார் யாழ்.இராணுவத்தளபதி

யாழ்.குடாநாட்டினில் முன்னெடுக்கப்படுகின்ற வெகுஜனப் போராட்டங்களில், சீருடையில் பாடசாலை மாணவர்கள் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுகின்றமை தொடர்பாக தமக்கு விளக்கமளிக்க வேண்டுமென யாழ். மாவட்ட படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன், கல்விப் பணிப்பாளர்களிற்கு அறிவுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக பலாலி இராணுவத் தலைமையகத்திலிருந்து சுனில் தென்னக் கோனின் ஒப்பத்துடன் கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. குறிப்பாக அண்மைக்

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஏழுபேர் கைது

இந்தியத் தூத்துக்குடிக் கடலில் இலங்கை மீனவர்கள் ஏழு பேர் இந்தியக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களின் படகு பழுதடைந்த நிலையிலேயே இவர்கள்கைதுசெய்யப்பட்டுள்ளார்கள். தமது கடலில் பிரவேசித்த குற்றச்சாட்டின் பேரில் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமென இந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (32)

## வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் அரசுக்கு எதிராக கண்டனப்பேரணி

அரசினால் அமுல்படுத்தப்பட்டு வரும் 100 மீற்றர் கடலோரச் சட்டத்தை கைவிடக்கோரியும், மீண்டும் மீனவர்களிற்கான பாஸ் வழங்கும் படைத்தரப்பின் முயற்சிகளைக் கண்டித்தும், உயர்பாதுகாப்பு வலயப் பிரச்சினையினை தீர்க்கக்கோரியும் வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்கங்கள் கண்டனப் பேரணியொன்றை நடாத்தவுள்ளன.

எதிர்வரும் 28ஆம் திகதி திங்கட்கிழமை பருத்தித்துறை மத்திய பேருந்து நிலையத்தினில் இருந்து இக்கண்டனப் பேரணி இடம்பெறவுள்ளது.

காலை 10.30 இற்கு ஆரம்பமாகும் கண்டனப் பேரணி யாழ். பருத்தித்துறை வீதியூடாக பருத்தித்துறை பிரதேச செயலகத்தை சென்றடையும், அங்கு தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜர்களை மீனவ சங்கப் பிரதிநிதிகள் கையளித்தபின் அங்கிருந்து ஊர்வலமாக தம்பசிட்டிப் பகுதியிலுள்ள போர்நிறுத்தக்கண்காணிப்புக்குழுவின் அலுவலகத்தைச் சென்றடைந்து அங்கும் மகஜர்களை கையளிப்பர்.

குறிப்பாக சுனாமி கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட இப்பகுதிகளில் மீன்பிடித்தொழில் படிப்படியாக முன்னெடுக்கப்பட்டுவருகையில் மீண்டும் பாஸ் நடைமுறைகள்

(12ஆம் பக்கம் பார்க்க)

## எக்காரணத்தைக்கொண்டும் ஜே.வி.பி அரசாங்கத்திலிருந்து விலகாது

### ஜே.வி.பி.தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவிப்பு

எந்தக்காரணத்தைக் கொண்டும் ஜே. வி. பி. அரசாங்கத்தில் இருந்து விலகாதென அந்தக் கட்சியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்றுக் கண்டியில் மல்வத்த மகாநாயக்கரைச் சந்தித்த பின்னர் ஊடகங்களுக்கு உரையாற்றிய அவர்,ஜே. வி. பி. தொடர்பான உண்மை நிலைப்பாடுகளை இன்று ஊடகங்கள் வெளியிடுவதில்லை.ஜே. வி. பி. இந்த நாட்டில் அனைத்துக்கட்சிகளும் இணைந்து செயற்படவேண்டுமெனக்கோரி வருகிறது.எனினும் அரசாங்கம் முன்வைக்கின்ற அனைத்துத் திட்டங்களையும் எதிர்ப்பது என்ற நிலைப்பாட்டை ஐக்கிய தேசியக்கட்சி கொண்டுள்ளதாக சோமவன்ச அமரசிங்க தெரிவித்தார். ஆறுமாதங்களுக்குள் சுனாமியினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுப்பது சிரமமானது அது இயலாத காரியம் எனவும் அவர் குறிப்பிட்டார். (32)

- பலாலி உயர்பாதுகாப்பு வலயத்தில் மக்களை -

## குடியமர்த்துவதிலுள்ள சிக்கல்கள் குறித்து ஆராய உயர்நீதிமன்றம் உத்தரவு

பலாலி உயர் பாதுகாப்பு வலயத்தில் மக்களை மீளக்குடியமர்த்துவதில் எழுந்துள்ள சிக்கல்கள் பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு உயர் நீதிமன்றம் யாழ்.மாவட்டசெயலாளருக்கு உத்தரவிட்டுள்ளது.

யுத்தத்தினால் இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்த அனுமதிக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவும், பிரதேச வாசிகளும் தாக்கல் செய்த மனுவை ஆராய்ந்தபோது உயர்நீதிமன்றம் இவ்வாறு தெரிவித்துள்ளது.

சட்டமா அதிபர் சார்பில் விளக்கமளித்த அரச தரப்பு சட்டத்தரணி பலாலி உயர்பாதுகாப்பு வலயத்தின் காணிகள் இராணுவத்தின் பொறுப்பில் உள்ளதாக தெரிவித்துள்ளார். மாற்றுக்காணிகளைப் பெற்றுக் கொடுக்கும் அரசின் தீர்மானத்தை மனுதாரர்கள் ஆட்சேபித்ததாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். மனுதாரர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி அரசின் தீர்மானத்தை நிறைவேற்றினால் பலாலி உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் வாழ்ந்த சுமார் எண்ணாயிரம் விவசாயிகள் நிர்க்கதி நிலைக்கு தள்ளப்படுவார்களென வாதிட்டுள்ளார். வழக்கு விசாரணை ஜூலை 18ஆம் திகதிவரை பிற்போடப்பட்டுள்ளது. (32)

## கொழும்பில் கைக்குண்டுவீச்சில் குழுமி நின்ற ஐவர் காயம்

கொழும்பு கிராண்ட்பாஸ் வதுள்ள தோட்டத்தில் நேற்றுமுன்தினமிரவு இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 5 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

வதுள்ளைத் தோட்டத்தில் நின்றிருந்த ஒரு கும்பலின் மீது முச்சக்கரவண்டியில் வந்த இனந்தெரியாத சிலர் கைக்குண்டொன்றை எறிந்துவிட்டுத்தப்பிச் சென்றனர். இச்சம்பவத்தால் அங்கு குழுமியிருந்தவர்களில் ஐவர் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இது பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்தவர்களின் வேலையாக இருக்கலாமென பொலிஸார் சந்தேகிக்கின்றனர். இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை. கிராண்ட்பாஸ் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்

## வரி விளம்பரம்

### விண்ணப்பப் படிவங்கள்

மத்திய மாகாண அமைச்சு திணைக் களங்களினால் கோரப்பட்டுள்ள சகல பதவிகளுக்கான விண்ணப்பப் படிவங்கள் அனைத்தையும் பார்வையிட்டுப் பெற்றுக்கொள்ளலாம். நிலவு கணினித்தொழில் நுட்பம் கச்சேரிஅருகாமை, கிளிநொச்சி. (5875)

### வீட்டுக் காணி விற்பனைக்குண்டு

இல 318 ஸ்கந்தபுரத்தில் வீட்டுடன் இரண்டு ஏக்கர் காணி விற்பனை செய்யப்படவுள்ளது. இதில் மா,பலா, தென்னை, பனை மரங்கள் உள்ளன. வாங்கவிரும்புவோர் கீழ்க் காணும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும். 077-316663,0112-942365. (5499)

### தவறிவிட்டது

"ஆ"பகுதிதேவிபுரம் புதுக்குடியிருப்பைச் சேர்ந்த அம்பிகாவதி ஜெயச்சந்திரன் என்பவருடைய தேசிய அடையாளஅட்டையும்(820785177 V) நிரந்தரபயண அனுமதி அட்டையும் 21.03.2005 7.00 மணியளவில் மன்னாகண்டல் காவல்துறை தடைமுகாமிற்கும், புதுக்குடியிருப்பு ஐயங்கோயிலுக்கும் இடையில் தவறிவிட்டது.கண்டெடுத்தவர்கள் புதுக்குடியிருப்பு ஈழநாதம் பணிமனையில் கொடுக்கவும். (5811)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

# கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கைதடி சித்தமருத்துவத் துறையில் அமைந்துள்ள கல்விசார் கட்டடங்கள் புனரமைப்புக் கட்டம் 11 வேலைகளுக்கான அரக்கிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் கட்டட நிர்மாண வேலைகளுக்கான இக்ராட் (ICTAD) நிறுவனத்தில் தரம் 8 அல்லது மேற்பட்ட தரத்தில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கேள்விச்சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்

கேள்விப் பத்திரங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பிரதிப் பதிவாளர் நிர்வாகம் அவர்களிடமிருந்து 20.04.2005 வரை ஒப்பந்தக்காரர் பதிவுப் புத்தகத்தையும் , யாழ்ப்பாணப்பல்கலைக்கழக காசாளர் கரும பீடத்தில் பின்வரும் வைப்பீடுகளுக்கான தொகை யைப் பணமாகச் செலுத்திய பற்றுச்சீட்டையும் சமர்ப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

**01.மீளளிக்கப்படும் வைப்புத்தொகை ரூ.2 0000.00**

**02.மீளளிக்கப்படாத வைப்புத்தொகை ரூ. 500.00**

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்கள் சீல் பண்ணப்பட்டு வேலையின் பெயரை உறையின் (எம்பலோப்) இடது மூலையில் குறிப்பிட்டு தலைவர், கேள்விச்சபை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். அவர்களிற்குக் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பப்படல்வேண்டும். அல்லது பல்கலைக்கழகப் பதிவாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியினுள் இடப்படல்வேண்டும்.

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 25.04.2005 அன்று மாலை மூன்று மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு, உடனடியாக அன்று மாலை 3.30 மணிக்கு திறக்கப்படும். கேள்விதாரர்களோ அல்லது அவர்களால் அங்கீகரிக்கப்பட்டவர்களோ கேள்விப்பத்திரங்கள் திறக்கும்பொழுது பிரசன்னமாயிருக்கமுடியும்.

தேவைப்படின் கேள்விப்பத்திரங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிர்வாகக் கிளையில் வழமையான அலுவலக நேரங்களில் கட்டணம் ஏதுமின்றி கேள்விதாரர்கள் பரிசீலிக்க முடியும்.

**தபால்பெட்டி இலக்கம் 57,**
**திருநெல்வேலி,**
**யாழ்ப்பாணம்.**

**துணைவேந்தர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

(சி.11611)


# 89 ஆவது நாள் நினைவலைகளில்

கடந்த 26.12.2004 அன்று ஏற்பட்ட ஆழிப்பேரலை அனர்த்தத்தில் எம்மைவிட்டுப் பிரிந்த எம் பாச உறவுகளான



திருமதி
**றோஸ்மலர் தவபாலசிங்கம்**

மலர்வு:-17.10.1954



செல்வி
**நிதர்சனா சுதாகரன்**

மலர்வு:-30.05.2001

ஆகியோரை இந்நாளில் எம் நெஞ்சங்களில் பூஜிப்பதுடன் இவர்கள் நினைவாக 25.03.2005 அன்று எமது தற்காலிக இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்திய நிகழ்விலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

மருதங்கேணி வடக்கு,
தாளையடி.

(5869)


தகவல்:-
குடும்பத்தினர்.

# 89 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியையும்



தங்கவடிவேலு
**நேசமணி**

மலர்வு 21 04 1937



புவனேஸ்வரன்
**அகிதாஸ்ரீ**

மலர்வு 12 01 1989

ஆலவிருட்சமென அன்னையே நீங்கள் வாழ்ந்தீர்கள்
நலமுடனே வாழ எம்மை வைத்துவிட்டு
வருபவர்க்கும் நிழல் கொடுத்தீர்
பாசத்தின் இருப்பிடமே பண்பின் ஒளிவிளக்கே
பணிவுடைய பிள்ளைகளைப் பாரினிற்குத் தந்தவரே
கோரமுடன் வந்த கடல் எம்குலக் கொடியை
அழித்ததனால் குமுறுகிறோம் நாமெல்லாம்

அகிலத்தின் ஒளிவிளக்காய் அன்னையர்க்கு
அகிதாவாய்
ஏற்றமிகு கல்வியும் நிறை செல்வமும் பெற்று வாழ்ந்தீர்.
இன்று எமக்கில்லாச் செல்வமாய்—எங்கு
தேடினாலும் கிடைத்திடா வெகு தூரம் சென்றாயே

26.12.2004 அன்று ஆழிப்பேரலையின் கோரப்பிடியில்
சாவடைந்த எமது குடும்பத்தினரையும் மற்றும்
உறவினரையும் நினைவு கூருகின்றோம்

24.03.2005 இன்று எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையில்
கலந்து கொள்வதுடன் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்தில்
கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

தகவல்:-
குடும்பத்தினர்,
வத்திராயன் வடக்கு,
வடமராட்சி கிழக்கு.

(5879)

## ஆசிரியரின் தாக்குதலால் மாணவன் ஆஸ்பத்திரியில்

ஆசிரியரினால் தாக்கப்பட்டு மயக்கம் அடைந்த பாடசாலை மாணவன் ஒருவர் மந்திகை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வரணி இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணியம் வித்தியாலய ஆண்டு பத்தில் கல்வி கற்கும் யோகேஸ்வரன் கேசவன் (வயது 15) என்பவரே வைத்தியசாலை விடுதியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

பாடசாலையின் அதிபர் மாணவன் காலையில் தாக்கப்பட்டு மயக்கம் அடைந்த போதிலும் உரிய முறையில் மாணவனை வைத்தியசாலைக்கு அனுப்பவில்லை.

வீட்டிற்குச் சென்ற மாணவன் வீட்டில் உடைகளை மாற்றுவதில் சிரமமடைந்ததைக் கண்ட பெற்றோர் நடந்தவற்றைக்கேட்டு வைத்தியசாலையில் அனுமதித்துள்ளதுடன் பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாட்டினைச் செய்துள்ளனர். (41)

## -கொடிகாமம் கோயிலாமனையில் இராணுவத்தினரின்-
# வெடி பொருள் அகற்றப்படவில்லை; பொதுமக்கள் பெரும் பாதிப்பு

(தென்மராட்சி)

**கொடிகாமம் கோயிலாமனைப் பிரதேசத்தில் கடந்த ஆறு மாதத்திற்கு முன்னர் சிறிலங்காப்படையினர் வெளியேறிய பகுதிகளில் படையினரால் புதைக்கப்பட்ட பெரும் அளவிலான வெடி பொருட்கள் அகற்றப்படாததால் இப்பிரதேச மக்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.**

கடந்த காலத்தில் இப்பகுதியில் ஐம்பது ஏக்கர் பரப்பளவுள்ள நிலப்பகுதிகள் படையினரின் படைமுகாம்களாக மாற்றப் பட்டிருந்தன.

இதனால் இப்பகுதியிலுள்ள வயல் நிலங்கள், தோட்டங்கள், வீட்டுநிலங்கள் அனைத்திலும் படையினரால் பெருமளவான வெடிபொருட்கள் புதைக்கப்பட்டிருந்தன. பின்னர் இவற்றைப் படையினர் அகற்றாமலேயே இவ்விடத்தை விட்டு வெளியேறியிருந்தனர்.

இவற்றை உடனடியாக அகற்றி மக்களின் இயல்பு வாழ்வுக்கு நடவடிக்கை எடுக்குமாறு யாழ். அரசாங்க அதிபர் மற்றும் சம்பந்தப்பட்ட துறைகளுக்கு வலியுறுத்தியும் இது வரை நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை என மக்கள் தெரிவித்துள்ளனர். (28)

## தென்மராட்சிப் பிரதேசத்தில் சமகால அரசியல் கருத்தரங்கு

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பிரதேசத்தில் பல்வேறு பகுதிகளில் சமகால அரசியல் கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன.

பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர், மற்றும் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் தலைமையில் இக்கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன.

தற்பொழுது நடைபெற்று வருகின்ற சமாதான நகர்வுகள் தொடர்பாகவும், சமாதான காலத்தில் மக்கள் எதிர்நோக்குகின்ற இராணுவ, புலனாய்வு அழுத்தங்கள் தொடர்பாகவும், மக்களிடையே குழப்பங்களை ஏற்படுத்தி ஒருமையை குலைக்க முற்பட்டுள்ள சக்திகள் தொடர்பாகவும், மக்களிடையே அரசியல் சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்துடன் இக்கருத்தரங்குகள் ஒழுங்கு செய்யப்பட்டு நடைபெற்று வருகின்றன. பெருமளவான மக்கள் இக்கருத்தரங்குகளில் கலந்து கொண்டு வருகின்றனர். (28)

## வரணியில் படையினர் அமைத்துள்ள முட்கம்பிகளை அகற்றக் கோரிக்கை

வரணிப்பகுதியில் பிரதான சாலைக்கு மிக அருகில் அமைக்கப்பட்டிருக்கும் படையினரின் முட்கம்பி வேலிகளை உடன் அகற்ற வேண்டுமென மக்கள் கோரியுள்ளனர்.

இரண்டு கிலோமீற்றர் தூரத்திற்கு முட்கம்பிச் சுருள்களை படையினர் சாலையின் இருமருங்கிலும், சாலைக்கு மிக அருகில் அமைந்துள்ளதால் பொதுமக்கள் விபத்தில் சிக்கும் அபாயம் தோன்றியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வாரம் துவிச்சக்கர வண்டியில் சென்ற ஒருவர் இந்த முட்கம்பி வேலியில் சிக்கி படுகாயம் அடைந்ததாகத் தெரியவருகிறது கடந்த சில மாதங்களாக இந்தப் படை முகாமை மேலும் விஸ்தரிக்கும் நடவடிக்கைகளிலும், புதிய அரண்களை அமைக்கும் நடவடிக்கைகளிலும் படையினர் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (28)

## மருதங்குளம் பாடசாலையை உடன் ஆரம்பிக்கக் கோரிக்கை

(தென்மராட்சி)

எழுது மட்டுவாள் வடக்கு மருதங்குளம் பாடசாலையை உடன் ஆரம்பித்து கல்விச் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த ஆண்டில் இப்பாடசாலை இராணுவ பாதுகாப்பு வலயத்திலிருந்து விடுவிக்கப்பட்டபோது இதனை உடனடியாக தொடங்குவதற்கு பாடசாலை நிர்வாகமும், தென்மராட்சி வலயக்கல்வி அலுவலகமும் புதிய கட்டடங்கள் கட்டப்படுவதைக் காரணம் காட்டி காலத்தைக் கடத்திவருகின்றது.

சம்பந்தப்பட்டவர்கள் அக்கறையுடன் செயலாற்றி இப்பாடசாலையை விரைவாக ஆரம்பிக்க வேண்மெனக்கோரப்பட்டுள்ளது. (28)

## தென்மராட்சியில் சட்டவிரோத மண் அகழ்வு அதிகரிப்பு

(தென்மராட்சி)

யாழ்.குடா நாட்டிலேயே அதிகளவு சட்ட விரோத மண் அகழ்வு நடைபெறும் இடமாக தென்மராட்சிப் பிரதேசமே இருப்பதாக சூழல் பாதுகாப்பு அமைப்புத்தெரிவித்துள்ளது.

சட்டத்தின் பலவீனமும் ஊழல் நிறைந்த பொலிசாரின் நிர்வாகமுமே இவ்வாறான சம்பவங்கள் நடைபெறக் காரணமாகும்.

பொலிசாருக்கும் மண் கடத்தலில் ஈடுபடுவோருக்கு இடையே நெருங்கிய தொடர்புகள் இருக்கின்றன எனவும் சூழல் பாதுகாப்பு அமைப்புத் தெரிவித்துள்ளது. (28)

## மின்விநியோக பொருட்கள் இல்லை; மின்சாரம் வழங்குவதில் நெருக்கடி

யாழ்.மின்சாரசபை அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டிலுள்ள போரினால் பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கான மின் விநியோகங்களை மேற்கொள்வதற்கு மின் விநியோகப் பொருட்களின் தட்டுப்பாடு பெரும் தடையாக இருப்பதாக மின்சாரசபையினர் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக இணைப்புக்கம்பிகள், மின் மாற்றிகள்,பொருத்தி உருளைகள்,மின்கம்பங்கள் என்பன பற்றாக்குறையாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் பல கிராமங்களிலிருந்தும் மின் விநியோகத்திற்கான விண்ணப்பங்கள் கிடைத்துள்ள போதும் விண்ணப்பித்தவர்களுக்கு மின்விநியோகம் செய்ய முடியாத நிலை இருப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது. (33)

## — வடக்கு-கிழக்கு மாகாணத்தில் —
## கஷ்டப் பிரதேச பாடசாலையாக 1034 பாடசாலைகள் பிரகடனம்

(வவுனியா செய்தியாளர்)

வடக்கு-கிழக்கு மாகாணத்திலுள்ள 1034 அரசாங்க பாடசாலைகள் கஷ்டப் பிரதேச பாடசாலைகளாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சில் அண்மையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றிலேயே இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக மாகாண கல்வி அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். வடக்கு-கிழக்கு மாகாணத்திலுள்ள 24 கல்வி வலயங்களினதும், கல்விப்பணிப்பாளர்கள், திட்டமிடல் பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள், மாகாண கல்வித் திணைக்கள அதிகாரிகள் கலந்து கொண்ட கூட்டத்திலேயே இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (10)

## வெளிவாரிப் பரீட்சைகள்

(வவுனியா செய்தியாளர்)

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரி கலைப்பிரிவு பரீட்சைகள் எதிர் வரும் இரண்டாம் திகதி முதல் 24 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதாக வெளிவாரிப் பரீட்சைகள் பிரிவுப் பதிவாளர் அறிவித்துள்ளார். (10)

## - வடக்குக்கிழக்கில் இவ்வாண்டில் -
## 7000 வீடுகளை நிர்மாணிக்க ஒருங்கிணைப்புக்குழு அங்கீகாரம்!

(திருகோணமலை)

உலக வங்கியின் நிதியுதவியுடன் வடக்குக் கிழக்கில் இந்த ஆண்டில் 7000 வீடுகளை நிர்மாணிக்க மாகாண ஒருங்கிணைப்புக் குழு அங்கீகாரம் வழங்கியுள்ளது என வடக்குக் கிழக்கு வீடமைப்பு புனர்நிர்மாணத்திட்ட தகவல், கல்வி தொடர்பாடல் நிபுணர் சி.வன்னியகுலம் அறிவித்துள்ளார்.

வடக்குக் கிழக்கு யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட4000 வீடுகளையும், சுனாமிப் பேரலையால் அழிவுற்ற 3000 வீடுகளையும் மீள் நிர்மாணம் செய்வதற்கு மாகாண ஒருங்கிணைப்புக் குழு அங்கீகாரம் வழங்கியுள்ளது. இந்த ஆண்டில் வடக்குக் கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத்திட்டம் இம்மாகாணத்தில் 2530 வீடுகளை மீள நிர்மாணிப்பதனையே இலக்காகக்கொண்டிருந்தபோதிலும் உக்கிரமடைந்துவரும் வீட்டுப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முகமாக இத்தொகை 7000ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் வடக்குக் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் செயலக கேட்போர் கூடத்தில் பிரதம செயலாளர் சி.இரங்கராஜா தலைமையில் இடம்பெற்ற மாகாண ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திலேயே இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்ட அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் தலா 1000 வீடுகளை மீள் நிர்மாணம் செய்வதற்கு அரசாங்க அதிபர்கள் உடன்பாடு தெரிவித்துள்ளனர்.

இதேவேளை யுத்தத்தினால் அழிவுற்ற வீடுகளில் மன்னார், அம்பாறை மாவட்டங்களில் தலா 300 வீடுகளும், வவுனியா மாவட்டத்தில் 350 வீடுகளும், முல்லைத்தீவு, கிளிநொச்சி , மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் தலா 500 வீடுகளும் , யாழ்ப்பாண மாவட்டத்தில் 1000 வீடுகளுமாக மொத்தம் 4000 வீடுகள் நிர்மாணிக்கப் படவுள்ளன.

அனுமதிக்கப்பட்ட இலக்குகளைத் துரிதமாக முன்னெடுக்கும் மாவட்டங்களில் அடுத்துவரும் ஆண்டிற்கென ஒதுக்கப்பட்ட வீடுகளின் ஒரு தொகை இந்த ஆண்டிலேயே நிர்மாணிக்கப்படவுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தொலைத்தொடர்பு சேவை வழங்குவதற்கு நடவடிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் சுனாமிக்கு பிற்பாடு தொலைத்தொடர்பு சேவையினை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழீழ நிர்வாக சேவையின் ஒழுங்குபடுத்தலில் அரச அதிபரின் நடவடிக்கையினால் இலங்கை ரெலிகொம் நிறுவனமூடாக இந்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதன் ஆரம்ப கட்டமாக தொலைத் தொடர்பிற்கான கம்பங்கள் நடப்பட்டு வருகின்றன. (20)

## நிறுத்தலளவைக் கருவிகளின் நிலைமை குறித்து முறைப்பாடு

(வடமராட்சி கிழக்கு)

பளை பொதுச் சந்தையில் மீன் வியாபாரிகளின் நிறுத்தலளவைக் கருவிகள் சீரின்மையாகவுள்ளது.

தராசுகள் ரயர்நூல்களினால் கட்டப்பட்டு சீரற்ற நிறுவைகளைக்காட்டுவதனூடாக வியாபாரிகள் மோசடிகளைச் செய்து வருகின்றார்கள் என்று பொதுமக்கள் கூறியுள்ளார்கள் இதன் காரணமாக மக்கள் மத்தியில் கடும் விசனம் ஏற்பட்டுள்ளது.

இதனைச் சீர்செய்ய வேண்டுமெனவும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (11)

# கால்நடை அபிவிருத்திக்கான கட்டமைப்பு வன்னியில் உருவாக்கம்

(ஒட்டுசுட்டான்)

**வன்னிப் பிரதேச கால்நடைகளின் அபிவிருத்தி சம்பந்தமாக கலந்துரையாடல் நடைபெற்றது. இதில் கால் நடை அபிவிருத்திக்கான கட்டமைப்பு ஒன்றும் உருவாக்கப்பட்டது.**

கடந்த திங்கட்கிழமை காலை 10.30 மணியளவில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப், பாளர் சி.கரிகாலன் தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் பல தீர்மானங்கள் எடுக்கப் பட்டுள்ளன.

அதன்படி பிரதேச செயலர் பிரிவு களில் கால்நடை வைத்திய நிலையங்கள் நிறுவப்பட்டு அதற் கான வைத்தியர்கள், கால்நடை போதனாசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டும். கால்நடைகளின் தர முயர்த்தல் சேவையை செயற்கைக் முறையில் செய்ய முடியாத இடங் களில் இயற்கை முறைகளை மேற் கொள்ளல், பத்திற்கும் மேலதிகமாக ஆடுகளை வைத்திருக்கும் பண்ணையாளர்களுக்கு நல்லினக் கடா வழங்க ஏற்பாடு செய்தல், கருச் சிதைவு நோயை கட்டுப்படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் துரித கதியில் நடவடிக்கை எடுத்தல் போன்ற தீர்மானங்கள் எடுக்கப் பட்டன.

வன்னி கால்நடை அபிவிருத்திக் கென கட்டமைப்பு ஒன்றும் உரு வாக்கப்பட்டது. இதில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பிரதிநிதி, கால் நடை உற்பத்தி சுகா தாரத் திணைக்கள வடபகுதி உதவிப் பணிப்பாளர்கள், மாவட்ட செயலகங்களின் திட்டப் பணிப் பாளர்கள் ஆகியோர் உள்ளடங்குவர்.

இக் கலந்துரையாடலில் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் வடக்கு கிழக்கு மாகாண அதிகாரிகள், கால்நடை வைத்தியர்கள், கிளி. முல்லை மாவட்டங்களைச் சேர்ந்த மேலதிக அரச அதிபர்கள், தமிழீழ பொருண் மிய மேம்பாட்டு நிறுவனத்தின் மாவட்ட பொறுப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (05)

## கரைச்சி வடக்கு அபிவிருத்தி நிறுவனம் உதவிப்பொருட்கள் வழங்கல்

(விசுவமடு)

கரைச்சி வடக்கு அபிவிருத்தி நிறுவனம் வீடு தீப்பற்றி எரிந்த குடும்பம் ஒன்றுக்கும், 27 முன் பள்ளிகளுக்கும் கடந்தவாரம் உதவிப் பொருட்களை வழங்கியுள்ளது.

கரைச்சி வடக்கு அபிவிருத்தி நிறுவனம் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் நிதியுதவியுடன் அண்மையில் கல்மடு சம்புக்குளம் பகுதியில் வீடு தீப்பிடித்து முற்றாக எரிந்து நாசமாகிய குடும்பத்துக்கு பாய், நுளம்புவலை, வாளி, வீட்டுப் பாவனைப்பொருட்கள் படுக்கை விரிப்பு, கூரை விரிப்பு என்பன வழங்கி உதவியுள்ளனர். நா.ஆறுமுகம் என்பவரது குடிசையே தீயினால் எரிந்து நாசமாகியது குறிப் பிடத்தக்கது.

இதேவேளை கண்டாவளைப் பிரதேசத்தில் இயங்கும் 27 முன் பள்ளிகளுக்கும் மேற்படி நிறுவனம் த.பு.க அனுசரணையுடன் பாய்கள், பெரியவாளி, நிலவிரிப்பு என்பன வழங்கியுள்ளது. (14)

*–தியாகி அன்னை பூபதியின் 17ஆம் ஆண்டு நினைவு*

## முழங்காவிலில் இடம்பெற்ற நான்காம் நாள் நிகழ்வு

(முழங்காவில்)

முழங்காவில் பிரதேசத்தில் தியாகி அன்னை பூபதியின் 17ஆம் ஆண்டு நினைவுதின நான்காம் நாள் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

முழங்காவில் கமக்கார அமைப்புத் தலைவர் விநாயகமூர்த்தி தலைமையில் முழங்காவில் மாவீரர் மண்டபத்தில் நடைபெற்ற இந் நிகழ் வில் பொதுச் சுடரினை முழங்காவில் மாவீரர் போராளி குடும்ப நலன் காப்பகப் பொறுப்பாளர் பெரியண்ணனும் நாச்சிக்குடா கிராம அலுவலரும் ஏற்றி வைத்தனர்.

தமிழீழ தேசியக் கொடியினை கிளிநொச்சி மாவட்ட நிர்வாகப் பொறுப்பாளர் ஈகை வேந்தன் ஏற்றி வைத்தார். அன்னை பூபதியின் திருவுருவப் படத்திற்கு ஈகச்சுடரினை நாச்சிக்குடா கிராம அலுவலரும் கரியாலை நாகபடுவான் கிராம அலுவலரும் ஏற்றி வைத்தனர். மலர் மாலையினை கரியாலை மக்கள் அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர் வசி அணிவித்தார். கருத்துரையை முழங்காவில் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழரசனும் கிளிநொச்சி மாவட்ட நிர்வாகப் பொறுப்பாளரும் நிகழ்த்தினார்கள்.

## தே.வீ. அதிகார சபையால் வீடு கட்ட கடன் வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

தேசிய வீடமைப்பு அதிகார சபையினரால் 2005ஆம் ஆண்டுக்குரிய வீடமைப்புத் திட்டக் கடனுதவியின் கீழ் 60 பேருக்கு தலா 50000 ரூபா கடன் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது.

2005ஆம் ஆண்டுத் திட்டத்திற்கமைவாக இதுவரை 20 பயனாளிகளுக்கு தலா 50,000 ரூபா வீதம் கடன் வழங்கப்பட்டுள்ளது. தொடர்ந்து 2005ஆம் ஆண்டு திட்டத்தின் படி இன்னமும் 40 பேருக்கு கடன் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக தேசிய வீடமைப்பு அதிகார சபையினர் தெரிவிக்கின்றனர். இக் கடன் தொகைகளுக்கு 11 சதவீத வட்டி அறவிடப்படுமெனவும் ஐந்து வருடம் அல்லது பத்து வருட காலத்திற்குள் கடன் மீளச் செழுத்தப்பட வேண்டுமெனவும் தெரிவிக்கப்படுகின்றது. அத்தோடு கடன் பெறும் பயனாளிகள் தமது சொந்தக் காணிகளை உடையவர்களாக இருப்பது அவசிய மெனவும் இதனை உறுதிப்படுத்த காணி அனுமதிப் பத்திரங்கள் இல்லாதவர்கள் உதவி அரச அதிபரின் உறுதிப்படுத்தலைப்பெற்றிருக்க வேண்டு மெனவும் மேற்படி வீடமைப்பு அதிகார சபையினர் தெரிவிக்கின்றனர். இதே வேளை வீடுகளை அமைக்கும் ஏனையோருக்கும் வீடமைத்தல் தொடர் பான ஆலோசனைகள் வழங்கவும் தாம் தயாராக இருப்பதாகவும் கிளிநொச்சி வீடமைப்பு அதிகார சபையி னருடன் தொடர்பு கொண்டு ஆலோசனைகளைப் பெற முடியு மெனவும் தெரிவிக்கின்றனர். (ச.தீ)



அவுஸ்திரேலியாவில் இருந்து வருகை தந்திருக்கும் நெஞ்சு நோய் தொடர்பான சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் நற்குணம் அவர்கள் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் நெஞ்சு நோய் தொடர்பான நோயாளர்களை பார்வையிடுவதைப் படத்தில் காணலாம். (குகன்)

## தருமபுரம் வைத்தியசாலைக்கு மருத்துவ உபகரணம் அன்பளிப்பு

அஸ்மா நோயைக் குணப்படுத்தப் பாவிக்கப்படும் நெபுலையர் (Nebulier) என்ற மருத்துவ உபகரணம் ஒன்று கிளிநொச்சி மருத்துவ சங்கத்தினால் தருமபுரம் அரசினர் வைத்தியசாலைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

இவ் உபகரணமானது அஸ்மா நோயினால் அவஸ்த்தைப்படும் நோயாளர்களுக்கு மருந்தை சுவாசத் தொகுதியினூடாகச் செலுத்தி உடனடி நிவாரணத்தை வழங்கக் கூடியதென வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன

## கண்டெடுப்பு

(அலுவலகசெய்தியாளர்)

புதுக்குடியிருப்பு தேவிபுரம் இல-12 "அ" பகுதியைச் சேர்ந்த கனகரத்தினம் குணச்செல்வி என்பவருடைய தேசிய அடையாள அட்டை இல:827341541V மற்றும் பயண அனுமதி அட்டை என்பன பரந்தன் பகுதியில் கண்டெடுக்கப்பட்டு கிளிநொச்சி ஈழநாதம் விளம்பரப் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரித்துடையவர் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளலாம். (சோ)

## சாரதீய அனுமதிப்பத்திரத்திற்கு ஏப்ரலில் செயன்முறைப் பரீட்சை

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளர் அலுவலகத்தினால் கடந்த நவம்பர் மாதம் நடாத்தப் பெற்ற உந்துருளி ஓட்டுநர்களுக்கான எழுத்துப் பரீட்சையில் சித்தியெத்தியவர்களுக்கான செயன் முறைப் பரீட்சை ஏப்ரல் மாத முற் பகுதியில் நடைபெறவுள்ளதாக தெரிய வந்துள்ளது.

மேற்படி விடயம் தொடர்பாக கிளி மாவட்ட மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளர் ஆ.கந்தசாமியுடன் தொடர்பு கொண்ட பொழுது தெரிவிக்கையில், கிளி மாவட்ட உந்துருளி ஓட்டுநர்களுக்கு கடந்த வருடம் நவம்பர் மாதம் 13ஆம்,14ஆம் திகதிகளில் நடாத்தப் பட்ட சாரதீய அனுமதிப் பத்திரத் திற்கான எழுத்துப் பரீட்சையில் சித்தி யெய்தியவர்களுக்கு எதிர் வரும் ஏப்ரல் மாதம் 9ஆம், 10ஆம் திகதி களில் கிளிநொச்சியில் செயன் முறைப் பரீட்சைகள் நடை பெறவுள்ள தெனவும் மேற்படி எழுத்துப் பரீட்சையில் சித்தி யெய்தியவர்கள் அனைவரும் மருத்துவச் சான்றிதழ்களை (ஆறு மாதங்களுக்கு உட்பட்டவை) சமர்ப்பிக்க வேண்டு மெனவும் அதன் பிரகாரம் மருத்துவச் சான்றிதழ்களை சமர்ப்பிக்கத் தவறின் செயன்முறைப் பரீட்சைக்குத் தோற்ற முடியா தெனவும் தெரிவித்துள்ளார். (சோ)

### ஒட்டு சுட்டானில் கணினிப் பயிற்சி

ரெக் நிறுவனத்தினால் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் நடைமுறைப் படுத்தப்பட்டு வரும் கணினிப் பயிற்சி நெறியில் இரண்டாம் பிரிவு வகுப்புக்கள் ஆரம்பமாக இருப்பதால் இப் பயிற்சி நெறியில் கலந்து கொள்ள விரும்பும் பயிற்சியாளர்கள் ஒட்டுசுட்டானில் அமைந்துள்ள பொருண்மிய மதியுரையகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு ரெக் நிறுவனப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (20)

### கால்நடை உப நிலையம் மாங்குளத்தில் திறப்பு

(ஒட்டுசுட்டான்)

கால்நடை உப நிலையம் அண்மையில் மாங்குளத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. எனவே இப் பகுதி மக்கள் கோழிகளுக்கான தடுப்பு மருந்துகளையும் ஏனைய கால் நடைகளுக்கான மருந்துகளையும் பெற்றுக் கொள்ளலாம் என கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர் ரட்ண சபாபதி தெரிவித்துள்ளார். (05)

### பயிற்சி பெற்று திரும்பினர்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் கால்நடை உற்பத்தி சுகாதார திணைக் களமும் இணைந்து ஒழுங்கு படுத்தி அனுப்பிய காராளி செயற்கை முறை சினப் படுத்தும் நிலையத்தின் தொழில்நுட்பவியலாளர்கள் பொலநறுவை அரசினர் கால்நடை பயிற்சி பாடசாலையில் பயிற்சி பெற்று திரும்பியுள்ளனர் என காராளி செயற்கை முறை சினைப்படுத்தல் நிலைய முகாமையாளர் தெரிவித்துள்ளார். (05)

## முல்லை.மாவட்ட காணிப்பிரச்சினைகளை தீர்க்க துரித காணிச் செயலணி அமைப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் அரச காணிகளில் வசித்து வரும் மக்களின் தீர்க்கப்படாத காணிப் பிரச்சினைகளுக்கு தீர்வுகளைப் பெற்று கொடுக்கும் முகமாக வடக்கு கிழக்கு மாகாண காணி நிர்வாகத் திணைக்களத்தால் முல்லைத்தீவு மாவட்டத்தில் துரித காணி செயலணி ஒன்று உதவிக் காணி ஆணையாளர் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது.

காணி விடயங்கள் தொடர்பாக இது வரை தமது பிரச்சினைகளுக்கு தீர்வுகளைப் பெறாதவர்கள் தத்தமது பிரிவு உதவி அரசாங்கஅதிபர் அலுவலகத்தில் இதற்கென விநியோகிக்கப்படும் விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்து விரைவாக அவற்றை உதவி அரசாங்க அதிபரிடம் ஒப்படைத்து தமது பிரச்சினைகளுக்கு இந்த துரித காணி செயலணி மூலம் தீர்வுகளைப் பெற்றுக் கொள்ளுமாறு துரித காணி செயற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துக் கொள்கின்றனர். (20)

# அமெரிக்காவில் மரண தண்டனைக்கெதிராக கத்தோலிக்க மதகுருமார் பிரசார இயக்கம்


(வோஷிங்டன்)

மரண தண்டனைக்கு எதிராக, அமெரிக்க கத்தோலிக் கப் பிஷப்புகள் பிரச்சார இயக்கத்தைத் தொடங்கியுள் ளனர்.

சமூகத்தைப் பாதுகாக்க வேறு வழிகள் இருப்பதால், மரணதண்டனையை கைவிடவேண்டும் என்று வோஷிங்டன் ஆர்ச்பிஷப் தியோடர் மெக்காரிக் கூறினார்.

"கடந்த ஆண்டு 69 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. இந்த ஆண்டு இதுவரை 12 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது" என்றும் அவர் தெரிவித்தார்.

"பள்ளிக்கூடங்கள், பல்கலைக்கழகங்கள் ஆகியவற் றில் மரண தண்டனைக்கு எதிராக கல்விப் போதனை அளிக்கப்படும். பாராளுமன்றத்திலும் செனட் சபையிலும் மரண தண்டனைக்கு எதிரான பிரச்சாரம் தீவிரப்படுத் தப்படும்" என்று தியோடர் மெக்காரிக் கூறினார்.



ஈராக்கையும், ஈரானையும் பிரிக்கும் எல்லைக் குன்றுப் பகுதியி னூடான வீதி ரோந்தில் ஈடுபட்டிருக்கும் அமெரிக்க இராணுவத் தொடரணி

# லெபனான் தலைநகரில் பாரிய குண்டுவெடிப்பு மூவர் உடல் சிதறிப்பலி; பலர் படுகாயம்!

## ஒரு வாரத்தினுள் நடந்த இரண்டாவது சம்பவம்

(பெய்ரூட்)

**லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் நேற்று அதிகாலை இடம்பெற்ற பாரிய குண்டுவெடிப்பில் மூவர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர். வணிக வளாகமொன்றிலேயே இந்தக் குண்டுவெடிப்பு இடம்பெற்றுள்ளது.**



இந்தக் குண்டுவெடிப்பில் இந்தியாவைச் சேர்ந்த ஒருவர் மற்றும் ஒரு பாகிஸ்தானியர் உட்பட மூன்று பேர் இறந்தனர். இதில் இலங்கையைச் சேர்ந்த இருவர் உட்பட ஏராளமானோர் படுகாயமடைந்தனர்.

மேலும் லெபனானில் முன்னாள் பிரதமர் ரபீக்ஹரீரி கடந்த சில வாரங்களுக்கு முன் காரில் சென்ற போது வெடிகுண்டு வீசி கொல்லப்பட்டார். இந்தக் கொலை சதியில் சிரியா சம்பந்தப்பட்டு இருப்பதாக லெபனானின் எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியிருந்தன. லெபனானின் இருந்து உடனடியாக சிரியாப் படைகள் வாபஸ் பெற வேண்டும் என்றும் எதிர்க்கட்சிகள் வற்புறுத்தி கலவரத்தில் ஈடுபட்ட நிலையில் சிரியாப் படைகளை விலக்கிக் கொள்ளும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் கடந்த 19 ஆம் திகதி பெய்ரூட் நகரில் உள்ள அடுக்குமாடிக் குடியிருப்பு அருகே கார்க்குண்டுத் தாக்கு தல் நடந்தது. இதில் அந்த அடுக்குமாடி குடியிருப்பு இடிந்தது. அருகில் இருந்த கார்களும் தீ பிடித்து எரிந்து ஏராளமானவர்கள் இதில் காயமடைந்தனர்.

இந்த நிலையில் பெய்ரூட்டில் உள்ள வணிக வளாகத்தில் நேற்று திடீர் என்று குண்டு வெடித்தது. இந்தக் குண்டுவெடிப்பில் வணிகவளாகத்தின் கூரை மற்றும் சில பகுதிகள் இடிந்து விழுந்தன.

குண்டு வெடித்த இடம் பெய்ரூட்டின் ஜோனிஷ் பகுதியில் உள்ளது. எதிர்க்கட்சிகளின் செல்வாக்கு அதிகம் உள்ள பகுதி இது. எதிர்க்கட்சியினரை மிரட்டுவதற்காக சிரியாவின் ஒத்து ழைப்புடன் ஆளும் கட்சியே இந்தக் வெடிகுண்டுத் தாக்குதலை நடத்தி இருப்பதாக எதிர்க்கட்சிகள் புகார் கூறி உள்ளன.



குண்டுவெடிப்பின் பின் சோதனை நடவடிக்கை

## டோனி பிளேயருக்கு 40 வீத ஆதரவு

(லண்டன்)

இங்கிலாந்து நாட்டுத் தேர்தல் வருகின்ற மே மாதம் நடக்கிறது. இதில் யாருக்கு வெற்றி கிடைக்கும் என்பதை கண்டறிவதற்காக நடந்த கருத்துக் கணிப்பில் பிரதமர் டோனி பிளேயருக்கு 40 சதவீத ஆதரவு கிடைத்துள்ளது. கன்சர் வேடிவ் கட்சிக்கு 32 சதவீத ஆதரவு மட்டுமே கிடைத்துள்ளது.

கடந்த மாதம் நடந்த கருத்துக் கணிப்பில் 37 சத வீதமும், கன்சர் வேடிவ் கட்சிக்கு 34 சதவீதமும் ஆதரவு இருந்தது.

கார்டியன் பத்திரிகைக்காக ஐ.சி.எம் இந்த கருத்துக் கணிப்பை நடத்தியது. கடந்த 18 முதல் 20 ஆம் திகதி வரை 1005 பேரிடம் இந்தக் கருத்துக் கணிப்பு நடத்தப் பட்டது.

## ஜப்பானில் தொடர்ந்து நில அதிர்வுகள்

(டோக்கியோ)

ஜப்பானின் ஜெங்காய் பகுதியில் மேலும் நில அதிர் வுகள் சரிவுகளும் தொடரலாம் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

ஜெங்காய் பகுதியில் பொலிஸ், இராணுவம், அதிகாரிகள், முகாமிட்டுள்ளனர். ஜெங்காயில் 750 பேர் வசித்தனர். அவர்கள் அனைவரும் ப்யூகுயுகா பகுதிக்குக் கொண்டு செல்லப்பட்டு விட்டனர்.

ஜப்பானில் இரண்டாம் நாளாக திங்கட்கிழமையும் நில அதிர்வுகள் தொடர்ந்து கொண்டிருந்தன.

அங்கு ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட கடுமையான நில நடுக்கத்தில் ஒருவர் இறந்தார். நூற்றுக்கணக்கானோர் காய மடைந்தனர். ரிச்டர் அளவு கோலில் ஏழாகப் பதிவாகி இருந்தது இந்த நிலநடுக்கம்.

இந் நிலையில் திங்கட்கிழமை ஃப்யூகுயுகா பகுதியில் 2,800 பேர் அவர்களது வீடுகளிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டுத் தற்காலிக முகாம்களுக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.



**இஸ்லாமாபாத்தில் நேற்று தேசிய தின அணிவகுப்பைப் பார்வையிடும் பாகிஸ்தான் சனாதிபதி முஷாரப் (இடம்) அவருடன் ஆப்கானிஸ்தான் சனாதிபதி கமீட்காசை (மத்தி) பாகிஸ்தான் பிரதமர் சௌகத் அசிஸ் ஆகியோர்.**

# உலக வங்கியின் புதிய தலைவருக்கு சர்வதேச நாடுகள் பல ஆதரவு

-அமெரிக்க செல்வாக்கு முக்கிய காரணம்

(வோஷிங்டன்)

உலக வங்கியின் புதிய தலை வராக நியமிக்கப்பட உள்ள பால் உல்போவிட்சுக்கு ஜேர்மனி, கனடா உள்ளிட்ட மற்ற நாடுகளும் ஆதரவு தெரிவித்துள்ளன.

உலக வங்கியின் தலைவர் ஓய்வு பெறுவதையொட்டிப் புதிய தலைவராக நியமிக்க பால்உல போவிட்ஸ் பெயரை அமெரிக்கா முன் மொழிந்தது. அவர் அமெரிக்க பாதுகாப்புத்துறை துணை அமைச்சர் பொறுப்பில் இருப்பவர் ஈராக் போரின் போது முக்கிய பங்கு வகித்தவர்.

இவரது பெயரை உலக வங்கித் தலைவர் பொறுப்புக்கு அமெரிக்கா முன்மொழிந்தமை மற்ற நாடுகள் மத்தியில் எதிர்ப்பை உருவாக்கியது.

அமெரிக்காவின் செல்வாக்கு கார ணமாக தற்போது மற்ற நாடுகளும் உல்போவிட்சை ஆதரிக்கத் தொடங் கியுள்ளன. ஜேர்மனி, கனடா போன்ற நாடுகளும் அவரை ஆதரித்து அறி விப்புக்களை வெளியிட்டுள்ளன. இத னால் மற்ற நாடுகளும் அவரை ஆதரிக்கும் என்று கூறப்படுகின்றது.

ஈராக் மீதான படையெடுப்பை எதிர்த்த பிரான்ஸ் நாடும் உல் போவிட்சை ஆதரிக்க முடிவு செய் துள்ளதாகக் கூறப்படுகின்றது. மற்ற உறுப்பினர்களான ஜப்பான், சீனா, நியூசிலாந்து, அவுஸ்திரேலியா, தென் கொரியா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளையும் உல்போவிட்ஸ் சந்தித்து ஆதரவு திரட்டி வருகிறார். இதனால் உல்போவிட்ஸ் உலக வங் கியின் தலைவராகத் தேர்வு செய்யப் படுவது உறுதியாகி வருகிறது.

# பாப்பரசரின் உடல்நிலை மீண்டும் பாதிப்பு ஈஸ்டர் ஊர்வலத்தில் பங்கேற்கமாட்டார்

**-இத்தாலி ஊடகங்கள் அறிவிப்பு**

பாப்பரசர் இரண்டாவது அருள் சின்னப்பரின் உடல் நிலை மோசமடைந்து விட்டதாக இத்தாலிய பத்திரி கைகள் பரபரப்பு தகவல்களை வெளியிட்டுள்ளன. ஈஸ்டர் ஊர்வலத்தில் அவர் கலந்து கொள்ளமாட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

84 வயதுடைய பாப்பரசர் பால் பர்க்கின்சன் என்னும் உடல் நடுக்க வியாதியால் அவதிப்பட்டு வருகிறார்.

இந்த நிலையில் அவருக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டு ரோம் நகரில் உள்ள செம்ல்லி மருத்துவமனையில் இரு முறை அனுமதிக்கப் பட்டு சிகிச்சை பெற்றார். கடந்த பெப்ரவரி மாதம் இரண்டாவது முறையாக அனுமதிக்கப் பட்ட போது தொண்டையில் சத்திர சிகிச்சை செய்து மூச்சு விட வசதியாக ஒரு குழாயை டாக்டர்கள் பொருத்தி னார்கள்.

கடந்த 13ஆம் திகதி அவர் தனது வசிப்பிடம் திரும் பினார். அதன் பிறகு இருமுறைதான் பொது மக்களுக்கு காட்சி அளித்தார்.

பாப்பரசரின் உடல் நிலை மோசமடைந்து விட்டதாக வும் அவருக்காக பிரார்த்திக்கும் படியும் பாப்பரசரின் செயலாளர் கூறியதாக ஒரு பாதிரியாரின் பேட்டியை ரோமில் இருந்து வெளி வரும் மொசாக்கரோ என்ற பத்திரிகை வெளியிட்டு இருக்கிறது. இந்த ஆண்டு வருகிற ஞாயிற்றுக்கிழமை நடக்கும் ஊர்வலத்துக்கு பாப்பரசர் தலைமை ஏற்க மாட்டார் என்றும் கார்டினல் கெமிலோ ரூயினி தலைமைவகிப்பார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. பாப்பரசர் அதை தொலைக்காட்சியில் பார்ப்பார்.




ஈராக்கில் சனவரி மாத தேர்தலை அடுத்துப் பதவி விலகும் ஈராக்கின் இடைக்கால நிர்வாகத் தலைவர் கசி அல்-ஜவார் அல்ஜீரியஸ்சில் நடை பெறும் 17 ஆவது அரபுக்களின் உச்சிமாநாட்டிற் கலந்து கொள்கின்றார்

# சந்திரிகாவின் திட்டங்களுக்கு முட்டுக்கட்டையாகவுள்ள ஜே.வி.பியினர்





**சுனாமி** பேரழிவுகளுக்குப் பின் குறுகிய அரசியல் நோக்கங்கள் எல்லாம் மாறிப்போய் புதிய அரசியல் யுகம் பிறக்கப் போகிறதென்று சகலரும் எதிர்பார்த்தனர். இதற்கு ஏற்றதாக சனாதிபதி அவர்கள் இரண்டு வருடங்களுக்கு சகல அரசியல் கட்சிகளும் அரசியல் போராட்டங்களைக் கைவிட்டு நாட்டை மீளக்கட்டி எழுப்பும் படலத்திற்கு வாருங்கள் என வேண்டுகோள் விடுத்தார். அதேபோல் எதிர்க்கட்சியினரும் நாட்டை மீளக்கட்டி எழுப்பும் சனாதிபதியின் திட்டத்திற்குப் பூரண ஒத்துழைப்பை தருவதாக வாக்குறுதியளித்தனர். ஆனால், இவையாவும் புஸ்வானமாக மறுபடியும் கட்சிகள் தமது பழைய நிலைப்பாட்டுக்கு வந்துள்ளன. விடுதலைப்புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் ஏற்பட்ட உறவு மேலும் மிக மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. உதாரணமாக ஐக்கிய நாடுகளின் செயலாளர் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட பொழுது வடக்கு-கிழக்கு வேறு தேசமாகவே அவரால் கணிப்பீடு செய்யப்பட்டது.

சுனாமிப் பேரலைக்குப் பின் வடக்கு-கிழக்கு புனர் நிர்மாண வேலைகள் யாவும் திட்டமிட்டு அரசாங்கம் புறக்கணித்து வருவதால் அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் ஏற்பட்டுள்ள உறவுகளில் விரிசல்கள் ஏற்பட்டு தற்பொழுது அது பாரிய அரசியல் பின்னடைவைச் சந்தித்துள்ளது. தென்பகுதியில் சனாதிபதிக்கும் ஜே.வி.பி.யினருக்கும் இடையில் கயிறுழுத்தல் போட்டி உச்சக் கட்டத்தை அடைந்துள்ளது. சனாதிபதி வேட்பாளர் சம்பந்தமாக கருத்து வேறுபாடுகள் வலுவடைந்து வருகிறது. இதனால், ஒட்டுமொத்த நிலைப்பாட்டுக்கு வருவதற்கு ஏற்பட்டுள்ள மார்க்கங்கள் யாவும் மூடப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. இந்திய அரசியலில் எவ்வளவு கருத்த வேறுபாடுகள் இருந்தாலும், தேசிய பிரச்சினைகள் வரும்பொழுது எதிர்க்கட்சியும் அரசாங்கமும் ஒன்றாகவே செயற்பட்டு வருகின்றன. இலங்கையில் அந்த நிலை கிடையாது. உதாரணமாக, கடல் நூறு மீட்டர் எல்லையை நிர்ணயித்து கொள்வதில் அரசாங் கமும் எதிர்க்கட்சியும் வேறுபட்ட கருத்துக் களை கொண்டுள்ளன.

இதற்கிடையில் நாட்டில் அதிகமான பிரதேசங்களில் சர்வதேச போட்டிகள் ஆரம்பித்துள்ளது. இதற்கு முதல் காரணம் சுனாமி பேரலை களின் அனர்த்தங்களாகும். 360 இற்கும் மேற் பட்ட அரச சார்பற்ற நிறுவனங்கள் தற்பொழுது இங்கு இயங்குகின்றன. போர்த்துகேயர் காலத்தைவிட படுமோசமான காலம் தற்பொழுது கிழக்கில் ஏற்பட்டுள்ளது.

பேராசிரியர் குமார் ரூபசிங்க
(லங்காதீப்)

மொழியாக்கம்
**அ.சக்திவேல்**

தமது நாட்டு கொடி களை இந்நாட்டில் பறக்கவிட்டு அதன் கீழ் கட்டுமான பணிகள், புனர்நிர்மாணப் பணிகள் யாவும் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றது. அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இல்லாத பெரும் நிதிகள் தற்பொழுது இங்கு இயங்கி வரும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு கிடைத்துள்ளது. பல கோடிக்கணக்கான நிதிகளை அவர்கள் தம்வசம் வைத்திருக்கிறார்கள். இவர்கள் இந்நாட்டில் 90வீத நன்மைகளை செய்யும் பொழுது எமது கலாச்சாரங்களும் எமக்குத் தெரியாமலே பாதிப்படைந்து கொண்டிருக்கின்றன. மதமாற்றங்கள் இங்கு தற்பொழுது அதி வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இது சம்பந்தமாக அரசாங்கத்தின் விழிப்புணர்வுகள் மிகவும் குறைந்ததாகவே காணப்படுகின்றது. வெளிநாட்டு உதவிகளை நாம் கோரும் பொழுது அவர்களின் நடவடிக்கைகளையும் நாம் கவனிக்க வேண்டியுள்ளது.

சர்வதேச நிதிகளை கடல் அனர்த்தங்களுக்கு மட்டும் செலவிடுவது நல்ல காரியமாக நாம் கருதமாட்டோம். இப்பொழுது கிடைத்துள்ள நிதி சுனாமி புனர்நிர்மாண வேலைகள் யாவும் பூர்த்தி செய்தும் மேலும் அதிகமான நிதி மிகுதிப்படும். இந்த நிதியை வடக்கு-கிழக்கில் இருபது வருட கால யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் புனர்நிர்மாண வேலைகளுக்கு உபயோகப் படுத்தலாம். இதற்கான ஒரு கொள்கையை வகுத்துக் கொள்ளுதல் மிக அவசியமாகும். யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் அதிகமானவர்கள் வடக்கு-கிழக்கில் வசிக்கின்றார்கள். அவர்களுக்கு நன்மைகளைச் செய்ய வேண்டும். சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஐந்து இலட்சம் ரூபாய் நஷ்டஈடாக வழங்கும்போது இருபது வருட கால யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு குறைந்த பட்சம் இரண்டு இலட்சம் ரூபாயாவது கொடுக்க வேண்டும். இதை மனிதாபிமான அடிப்படையில் செய்ய வேண்டும். இதற்கான கட்டமைப்பொன்றை ஏற்படுத்த வேண்டுமானால் அரசியல் கட்சிகள் யாவும் ஓரே நிலைப்பாட்டுக்கு வரவேண்டும்.

இப்பொழுது அரசாங்கத்திற்குள் உட்பூசல்கள் அதிகரித்துள்ளது. மூன்றாவது தடவையும் தான் இந்த நாட்டில் சனாதிபதியாக பதவி வகிக்க வேண்டும் என்று சந்திரிகா அம்மையார் கனவு காண்கிறார். சமீபத்தில் வெளிநாட்டு பிரதிநிதிகள் இலங்கைக்கு வந்தபொழுது எந்த நிபந்தனைகளும் இல்லாமல் அரசியல் யாப்பை மாற்றுவதற்கு வழிகளை உள்ளதென சுட்டிக் காட்டி உள்ளனர். பாராளுமன்றத்தில் அரசியல் யாப்பு சபை ஒன்றை ஏற்படுத்தி அதன் மூலமாக அரசியல் யாப்பை மாற்ற முடியும். புதிய யாப்பினை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து மூன்றில் இரண்டு பங்கு பலத்தை பெற்று கொள்ள முடியும் என அவர்கள் அறிவுரைகளை வழங்கி உள்ளனர். சுனாமியால் இவை மூடுப்பட்டிருந்தாலும், தற்போதைய அரசியல் பிணக்குகளுக்கு வழிகளை வேண்டுமானால் சர்வதேச பிரதிநிதிகளின் கூற்றை அரசாங்கம் அமுல்படுத்துவதற்கு தகுந்த தருணம் ஏற்பட்டுள்ளது.

இப்பொழுது சனாதிபதி அவர்கள் இரண்டு பிரச்சினைகளில் சிக்கியுள்ளதுடன் அதி லிருந்து விடுபட்டு முடிவு காணும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார். ஜே.வி.பி.யை அரசாங்கத்துடன் மேலும் இணைத்துக் கொள்வது, இரண்டாவது சர்வசன வாக்கெடுப்பின் பொழுது ஜே.வி.பி.யின் அனுசரணை கட்டாயம் அரசுக்கு தேவைப் படுவது. மற்றும் சர்வசன வாக்கெடுப்பை பற்றி தெளிவான விளக்கம் இதுவரை சனாதிபதி தெரிவிக்கவில்லை. ஆனால், நிட்டம்புவையில் நடந்த மகளிர் சம்மேளனத்தின் கூட்டத்தில் உரையாற்றும் போது சமஷ்டி முறையைக் கொண்டு வருவதற்காகவே சர்வசன வாக்கெடுப்பினை நடத்தப் போவதாக அக் கூட்டத்தில் சூசகமாகத் தெரிவித்துள்ளார். இது கட்சிக்குள் பெரும் சர்ச்சையை உண்டு பண்ணி உள்ளது. "சமஷ்டி" முறைக்கும் ஜே.வி.பியின் கொள்கைகளுக்கும் மிக வேறுபாடுகள் உண்டு இதை சனாதிபதி பரீட்சித்துப் பார்க்க விரும்புகிறார். மார்ச் மாதம் சனாதிபதி ராசிப் பலனின் படி அவரின் பலன்கள் கூடாது. ஆனபடியால் 2006ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இந்த சர்வசன வாக்கெடுப்பு நடத்துவதற்கு இடமுண்டு. இதை செய்வது அவ்வளவு இலகுவானதல்ல. இந்த நாட்டில் அதிக மானவர்கள் சர்வசன வாக்கெடுப்பை விரும்ப மாட்டார்கள்.

அதே நேரத்தில் ஐக்கிய தேசியக் கட்சி, நாடு தற்பொழுது உள்ள நிலையில் சர்வசன வாக்கெடுப்பு நடத்துவதை ஏற்கனவே எதிர்த்துள்ளது. அரசியல் யாப்பினைத் திருத்தி அமைப்பதற்கு மூன்றில் இரண்டு வாக்கு களைப் பெற்ற பின் சர்வசன வாக்கெடுப்பை நடத்தலாம். இதற்கான சட்டங்களை ஏற்படுத்த வேண்டும். இவற்றுக்கு பரிகாரம் காணும் பொழுது தற்போதைய அரசில் அங்கம் வகிக் கும் கட்சிகளின் இணக்கப்பாடுகள் மிக அவசியமாகும். அதேவேளை சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் சனாதிபதி வேட்பாளரை தெரிவு செய்வதில் பெரும் இழுபறி நிலையில் உள்ள னர். நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனா திபதி முறையை ஒழித்து மீண்டும் பழைய பாராளுமன்ற நடைமுறையை கொண்டுவருவ தற்கு ஜே.வி.பியினர் ஒத்துழைப்பு வழங்கப் போவதாக அறிவித்துள்ளனர். ஆனால் "சமஷ்டி" ஆட்சிமுறையை ஜே.வி.பியினர் ஆதரிக்க மாட்டார்கள். 1970 ஆம் 1976 ஆம் ஆண்டு காலங்களில் ஐக்கிய முன்னணி அரசின் கொள்கைகள், நடைமுறைகள் மிகவும் வேறுபட்டதாக இருந்தபடியால் அப் போதைய அரசின் அனுகுமுறைகளும் மிக வேறுபட்டதாகவே காணப்பட்டது. அதாவது அன்றை கட்சியில் அங்கம் வகித்த லங்கா சமசமாஜக் கட்சியும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியும் தெளிவான அரசியல் நோக்கங்களைக் கொண்டிருந்த படியால் ஐந்து வருடங்கள் அவர்கள் ஆட்சியுடன் இணைந்து செயற்பட்டனர். தற்போதைய அரசின் நடவடிக்கைகள் யாவும் பொதுவாக விமர்சனம் செய்யப்படுகின்றது. அன்று கலாநிதி என்.எம்.பெரேரா, கலாநிதி கொல்வின் ஆர்.டி.சில்வா, லெஸ்லி குணவர்த்தனா போன்றவர்களின் அரசியல் சாணக்கியத்தால் ஐந்து வருடங்கள் ஐக்கிய முன்னணி அரசு பிளவு படாமல் காப்பாற்றப்பட்டது. 1975 ஆம் ஆண்டு காலங்களில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் அதிக பெரும்பான்மை இருந்தபடியால் அன்றைய இடது சாரிகளை கட்சியிலிருந்து வெளியேற்றி 1977 ஆம் ஆண்டு தனித்துப் போட்டியிட்டு வெற்றி பெறலாம் என்று கட்சியில் இருந்த சில சிரேஷ்ட உறுப்பினர்கள் அறிவுரை வழங்கி சிறிமாவோ பண்டாரநாயக்கா அம்மையாரை பிழையான வழியில் அவரை நடத்தினர்கள். அதனால் சிறிலங்கா சுதந்திரக்கட்சி 1977 ஆம் ஆண்டு தேர்தலில் படுதோல்வியைத் தழுவிக்கொண்டது. ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியைக் கைப்பற்றி நீண்ட காலம் ஆட்சியை நடத்தியது. இந்தச் சரித்திரத்தை தற்போதைய அரசு புரிந்துகொண்டு நடப்பது மிக அவசியம்.

கூட்டாட்சி ஏற்படுத்தி ஒரு வருடம் கடந்த பின் கட்சியினுள் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொள்வதும் விமர்சனம் செய்வதும் ஆரம்பமாகியுள்ளது. அதாவது பிரச்சினைகளை தீர்த்துக்கொள்வதில் பொது உடன்பாடு ஒன்று எட்டாத படியால் மேலும் பிரச்சினைகள் கட்சிக்குள் தீவிரமடையலாம். சிறிலங்கா சுதந்திரக்கட்சியினரும் ஜே.வி.பியினரும் நேரடியாக தற்பொழுது மோதலில் ஈடுபட்டு வருகின்றனர். ஜே.வி.பியின் முழு நோக்கம் சிறிலங்கா சுதந் திரகட்சியினரின் வாக்காளர் எண்ணிக்கை கயைப் படிப்படியாக குறைத்து, தமது கட்சியின் வாக்குப்பலத்தை அதிகரிப்பதாகும். தற் பொழுது ஜே.வி.பியின் இலக்குகள் படிப்படியாக முன்னேற்றம் கண்டு வருகின்றது. ஐக் கிய தேசியக்கட்சியை தோல்வி அடையச் செய்ய வேண்டுமானால் ஜே.வி.பியினரின் ஆதரவு கட்டாயம் தேவை. இதை எதிர்பார்த்தே இக்கூட்டை ஆரம்பித்தது. ஆனால் இக்கூட்டு சிறிலங்கா சுதந்திரகட்சியினருக்கே உலை வைக்கத் தொடங்கியுள்ளது. தற்பொழுது ஜே.வி.பியினரும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் ஒருவரை ஒருவர் விழுங்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

சர்வாதிகாரத்தின் எதிர்ப்பு ஆண்டாக இவ்வருடத்தை ஜே.வி.பி பிரகடனப்படுத்தி உள்ளது. இதற்காக பல வேலைத் திட்டங்களையும் முன்னெடுத்துள்ளது. அதாவது போர்த்துக்கேய யுகத்திற்கு முன் நாடு எப்படி இருந்ததோ அதே நிலைக்கு தற்பொழுது நாட்டைக் கட்டி எழுப்புவதே ஜே.வி.பியின் சர்வதிகார எதிர்ப்பு ஆண்டின் பிரகடனமாகும். துரதிஷ்டவசமாக சுனாமிப் பேரழிவுகள் நாட்டில் ஏற்பட்டதால் இவர்களின் பிரகடனம் செல்லாக்காசாகிவிட்டது. அதாவது செல்வந்த நாடுகளின் நிவாரணங்கள் கோடிக்கணக்கில் எமது நாட்டிற்கு வந்து குவியத்தொடங்கி உள்ளது. மற்றும் சர்வதேச இராணுவம் எமது நாட்டில் வந்து தற்பொழுது தங்கி சுனாமி நிவாரண வேலைகளில் ஈடுபட்ட வண்ணம் உள்ளது. ஆனபடியால் ஜே.வி.பியினரின் எதிர்ப்புக்கள் யாவும் மக்கி கிடங்கில் தள்ளப் பட்டுள்ளது. தென்பகுதி புனர்நிர்மாண வேலைகள் அவர்களின் சுகாதார சேவைகள், நிதிகள், மனித வளங்கள் யாவும் தென்பகுதி அபிவிருத்திகளுக்கு பயன்படுத்தப்பட்டு வருகின்ற படியால் தற்பொழுது ஜே.வி.பியினரின் எதிர்ப்பிரச்சாரங்கள் யாவும் முடங்கிப் போய் உள்ளது.

ஜே.வி.பியினரை பகைத்துக்கொண்டு சர்வசன வாக் கெடுப்பை நடத்த முடியாதென சனாதிபதி நன்கு உணர்ந்துள்ளார். வடக்கு கிழக்கு புனர் நிர்மாண வேலைகள் புலிகளைக் பகைத்துக் கொண்டு செய்யமுடியாது. அவர்களின் பூரண ஒத்துழைப்புடன் புனர்நிர்மாண வேலைகளைச் செய்து முடிப்பதற்கு தற்பொழுது அரசாங்கம் தீர்மானம் எடுத்துள்ளது. இதற்கான சபை ஒன்றினை அமைத்து அச்சபையில் ஐந்து தமிழ் பிரதிநிதிகள், மூன்று முஸ்லிம் பிரதிநிதிகள், இரண்டு சிங்களப்பிரதிநிதிகள் உள்ளடக்கப்போவதாக அரசு அறிவித்துள்ளது. இது எங்களுக்கு முக்கியமானதொன்றாகும். இவை இல்லாமல் வடக்கு கிழக்கு புனர்நிர்மாண வேலைகளை செய்து முடிக்க இயலாது. அம்பாறை, மட்டக்களப்பு, முல்லைத்தீவு போன்ற மாவட்டங்கள் சுனாமியால் அதிகமாக பாதிக்கப்பட்ட இடங்களாகும். இப்பகுதியை மீளக்கட்டி எழுப்புவதற்கு பெரும் தொகையான நிதி தேவைப்படுகிறது. இதை விடுதலைப்புலிகளும் ஏற்றுக்கொண்டுள்ள படியால் அரசாங்கத்திற்கு இவர்களின் அனுசரணை கட்டாயமாக தேவைப்படுகிறது. ஆகவே விடுதலைப்புலிகளை இணைத்துக்கொண்டு செயற்பட்டால் நிச்சயம் வெற்றி கிடைக்கும் என அரசாங்கம் எண்ணுகிறது. ஆகவே இதை அமுல்படுத்த ஏன் அரசாங்கம் தயக்கம் காட்டுகிறது. அதாவது ஜே.வி.பியினருடன் இணைந்து செயற்படுவதா? இல்லையா? இல்லையேல் ஜே.வி.பியுடன் இணைந்து சர்வசன வாக் கெடுப்பை நடத்துவதா?அதன் பிறகு புலி களுடன் இணைந்து செயற்படுவதா இதுவே சனாதிபதி தற்பொழுது முகம் கொடுத்துள்ள முக்கிய பிரச்சினையாகும். இவற்றை அமுல் படுத்துவதில் காலதாமதம் ஏற்படும் இதை வடக்கு கிழக்கு மக்கள் அனுமதிக்க மாட்டார்கள் மறுபக்கம் சர்வதேச நாடுகளும் இவைகளை அங்கீகரிக்காது. இவற்றை அரசு உணர்ந்து செயற் படுவது மிக அவசியம். இல்லையேல் தமிழ் மக்களின் மனதையும் சர்வதேசத்தின் மனங்களையும் வென்று நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதா? அப்படி இல்லா விட்டால் சர்வசன வாக்கெடுப்பை நடத்தி தொகுதிவாரியான தேர்தல் முறையை நடை முறைப்படுத்து வதா? இரண்டில் ஒன்றை சனாதிபதி தேர்ந்தெடுப்பது அவசியமாகும். இந்தப் பதவி மோகத்திற்கு இலங்கை மக்கள் வெகுவிரைவில் சனாதிபதிக்கு நல்லதொரு பாடத்தை புகட்டுவார்கள்.

*

**வழமைபோல** அன்றும் நோயாளர் விடுதிகளில் நோயாளர்களைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தபொழுது முல்லைத்தீவில் இருந்து தப்பிவந்தவர்கள், "கடல் ஊருக்குள்ள வந்திட்டுது சனங்களுக்கும் சிக்கலாம்" எண்டு சொல்லியதாக எனக்கு தகவல் கிடைத்தது.

அந்தத் தகவலை அறிந்த உடனடியுமே அவசர நிலையில் நாங்கள் எதையாவது செய்ய வேண்டும் என்ற நோக்கில் அவசர சிகிச்சைக்காக விடுதிகளை தயார்ப்படுத்தி வைக்குமாறு கூறிவிட்டு நானும், அதேசமயம் கடமையில் இருந்த இன்னொரு டொக்டருமாகச் சேர்ந்து எங்கள் அம்புலன்ஸ் வண்டியில் முல்லைத்தீவை நோக்கிப் போய்க் கொண்டிருந்தோம்.

முள்ளிவாய்க்கால் என்ற இடத்தில் வைத்து, அங்கால போகமுடியாது என்று மறித்துவிட்டார்கள். ஆனால், நாங்கள் கட்டாயம் போகவேணும் என்று கதைத்து வட்டுவாகல் பாலம் வரை போனோம். அதற்கப்பால் போக முடியாமல் போய்விட்டது. கடல் மீண்டும் அடித்தது. அதனால் நாங்கள் அதில் இருந்து திரும்பி மீண்டும் வைத்தியசாலைக்கு வந்து விட்டோம்.

வைத்தியசாலையில் இருந்த நோயாளர்களைப் பார்த்துக் கொண்டிருந்தேன். திடீரென காவல்துறையின் வாகனம் வைத்தியசாலை வளவினுள் வந்து நின்றது. முல்லைத்தீவில் இருந்து கடல் அனர்த்தத்தால் காயப்பட்ட மக்களை ஏற்றிவந்த முதலாவது வாகனம் காவல்துறையின் வாகனம்தான். அந்த வாகனத்தில் நான்கு பேர் தண்ணி குடிச்சு மோசமான நிலையில் வந்தார்கள். அதில் ஒருவர் சின்னப்பிள்ளை எல்லோருமே மயங்கித்தான் வந்தார்கள்.

இந்த நிலையில், இவர்களுக்கான சிகிச்சை அளிப்பதற்கு போதுமான சிலிண்டர்கள் எதுவும் இருக்கவில்லை. அதனால் நாலு பேருக்கும் மாறிமாறி சிலிண்டர்களை போட்டு

துக்கும் பிரித்து அனுப்பிக்கொண்டிருந் தோம். ஒரு கட்டத்தில் வைத்தியசாலையின் பெருமளவான பகுதி சடலங்களால் நிறைந்து போய் விட்டது. ஒவ்வொரு சடலங்களைப் பார்க் கின்ற போதும் மனம் வெதும்பியது. என்ன செய்வதென்றே தெரியாத நிலையில் நாங்கள் தளம்ப வேண்டிய பயங்கர நிலையில் இருந்தோம்.

ஒன்றா இரண்டா பல நூறு உடல்கள் அல்லவா வந்து குவிந்திருந்தன.? வைத்தியசாலையின் அதிக விடுதிகள் சடலங்களால் நிறைந்தது. பெண்கள், ஆண்கள் சிறுவர்கள் என்று வேறுபடுத்த முடியாத படியும், பதிவுகள் எதையும் செய்ய முடியாத நிலையிலும் அன்றைய செயற்பாடு இருந்தது.

இந்தப் பயங்கரமான சூழலுக்குள் நின்று ஒவ்வொரு வரையும் காப்பாற்றிவிடவேணும் என்ற துடிப்பில் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பொழுது

கணத்தையும் கழித்துக்கொண்டி ருந்தார்.

அந்தத் தாயின் உயிரைக் காப்பதற்காய் இரண்டு மணித்தியாலங்களுக்கும் மேலாக கடுமையாக முயன்றோம். அந்தத் தாயின் உயிர்பிரிந்து விடக்கூடாது என்பதே எங்கள் ஒரே இலக்காக இருந்தது. பாவம் அந்த அம்மாவின் கணவரும் அருகில் தான் நின்றார். அவர் தன் மனைவியின் உயிர்தப்பிவிட வேண்டும் என்ற ஏக்கத்துடன் தவித்துக் கொண்டிருந்தார்.

இறுதியில் எங்களின் இரண்டு மணி நேர முயற்சியும் அந்தக் கணவரின் தவிப்பும் வீணாகிப்போய்விட்டது. அந்த இளந்தாயின் உயிர்பிரிந்து போய்விட்டது. உயிர்பிரிந்த நேரத்தில் அந்த அம்மாவின் கணவர் பட்ட

குழந்தைகளினதுமாகத் தான் இருந்தது.

இப்படியான நெருக்கடி மிக்க அனுபவம் எங்களுக்குப் புதியது. அதனால் இதனைக் கையாள்வது கஷ்ரமாய் தான் இருந்தது. ஒரு பேசன்ரைப் பார்த்துக்கொண்டிருக்க வெளியால எங்களுக்காக காத்தபடி பலர் வரிசையாய்க் கிடந்தார்கள். யாரைப்பார்ப்பது என்று தெரியாமல் இருந்தது.

அன்றைய சம்பவம் உண்மையில் எங்களை உலுப்பித்தான் விட்டது. இந்தளவு பாரிய மனித அவலத்தை பார்த்தவுடன் எனக்குத் தலை விறைக்க ஆரம்பித்து விட்டது. எங்களது நிலை இப்படியாக மாறினால் யார் அவர்களைக் காப்பது என்கின்ற சிக்கல் உருவானது. அங்கு போவதும், இங்கே வருவதுமாக



**நான் இப்பத்தான் பல்கலைக்கழகத்தில இருந்து வெளியேறி இங்கவந்து வேலை செய்யிறன். புது அனுபவம்தான். அதால எப்படி இதுகளக் கையாளுறது எண்டுறதே தெரியாமல் இருந்தது. இப்படிப் பெருந்தொகையான ஆட்கள் வருவினம், நான் அவையளச் சமாளிப்பன் எண்டு நினைக்கவே இல்லை. ஒவ்வொரு காட்சிகளும் எங்களை திகைப்படையச் செய்தது. நெருக்கடியத் தீர்க்கிறத்துக்கு பொன்னம்பலம் தனியார் மருத்துவமனை டொக்டர்மாரும் விடுதலைப்புலிகளின் மருத்துவப் பிரிவுப் போராளிகளும், போராளி மருத்துவர்களும் வந்து எங்களுக்கு உதவி செய்தவையள். எனது முதல் அனுபவமே பெரும் வேதனையானதாய் போச்சுது. எப்படி எண்டாலும் எங்கட கைக்கு வந்தவயள்ள ரண்டு பேரத் தவிர மிச்சம் எல்லாரையும் காப்பாற்றிப் போட்டம் என்று சம்பவதினம் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் கடமையிலிருந்த இளம் வைத்தியர் பரதனாலிங்கம் சத்தியரூபன் எங்களுடன் பகிர்ந்தவிடயங்கள் உங்களுக்காக இந்தப் பகுதியில்...**

*பகுதி–42*



# சிறுவர்களும் குழந்தைகளும் சடலமாய்த்தான் வந்தார்கள்

ஒரு மாதிரி சிகிச்சை வழங்கினோம். அதில் வந்த ஒருவருக்கு பெரிய கிழியல் காயம் இருந்தது.

அந்தக் காயம் சற்று பெரிதாகத்தான் இருந்தது. காயத்தை சுத்தம் செய்வது பெரும் சிரமாய் இருந்தது. ஏன் என்றால் அந்தக் காயத்துக்குள் கலங்கல் தண்ணியும் கஞ்சல்களும் போய் இருந்தது. ஒவ்வொரு கஞ்சலாய் அகற்றி காயத்தை சுத்தம் செய்வதென்பது கடினமானது.

இப்படியே முதல் தடவையில் வந்த நான்கு கேஸ்சில ரண்டு கேஸ் மோசமான நிலையில் இருந்தது. அந்த ரண்டு கேஸையும் கூடின கவனம் எடுத்து பாத்திட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் அனுப்பிவிட்டோம்.

இப்படி இருக்க அடுத்த வாகனமும் வந்திட்டுது. முதல் வந்த வாகனத்தில காயக்காரர் தனியத்தான் வந்தவயள். பிறகுவாற வாகனங்கள் எல்லாத்திலையும் உயிரற்ற உடல்களோடுதான் காயக்காரரும் வந்தினும். அதுக்குள்ள ஆக்களப் பிரிச்சுப் பார்க்கிறது பெரிய சிக்கலா இருந்தது. காயக்காரரிலயும் கனபேர் ஆட்டம் அசைவில்லாமல் தான் கிடந்தினம்.

நெருக்கடியான நிலையில் இருந்த பொழுது பொன்னம்பலம் மருத்துவமனையின் வைத்தியர்கள் உதவிக்கு வந்துவிட்டார்கள். வைத்தியசாலையில் இருந்த மருத்துவப் பொருட்களின் தட்டுப்பாட்டை நீக்குவதுபோல அவர்களும் தங்களால் ஆன உதவிகளைச் செய்தனர். அதன் பிறகு விடுதலைப்புலிகளின் மருத்துவப் போராளிகள், போராளி மருத்துவர்கள் எனப் பலரும் வந்து குவிந்துவிட்டார்கள்.

## முல்லையில் ஆழிப்பேரலைகள் நடத்திய கோரத்தாண்டவம்

இந்த நிலையில், காயக்காரரை ஒரு இடத்திலும், இறந்தவர்களை இன்னோர் இடத்து மோசமான நிலையில் உயிருக்குப்போராடிய படி ஒவ்வொரு

ஒருவேதனையான சம்பவம் நடைபெற்றது. இச்சம்பவம் நடை பெறுவதற்குப் பத்து நாட்களுக்கு முன்னர் எங்கள் வைத்தியசாலையில் ஒரு பிரசவம் நடைபெற்றது.

அந்தப் பிரசவம் நடைபெற்று பத்து நாட்களான நிலையில் வைத் தியசாலையில் இருந்து அந்தத் தாய் முல்லைத் தீவில் உள்ள தனது வீட்டுக்குப் போயிருந்தார். பாவம் அந்தத் தாய் கடல் அலைக் குள் அம்பிட்டு தான் பெற்ற பத்துநாட்கள் நிரம்பிய பச்சிளம் குழந்தையைப் பறிகொடு

வேதனையை என்னால் சகித்துக்கொள்ள முடியாமல் இருந்தது. வேதனையின் உச்சத்துக்கு நானும் போய் விட்டேன்.

சிலமணி நேரங்களில் அதே கட்டிலில் அந்த அம்மாவின் கணவருக்கு சிகிச்சை வழங்க வேண டிய நிலை ஏற் பட்டு விட்டது. அவர் மயக்க மடைந்து மாறாட்டமான கதைகளைப் பேச ஆரம் பித்துவிட்டார். உள வியல் ரீதியான பாரிய பாதிப்பிற்குள்ளாகியிருந்தார்.

இப்படியாக வைத்தியசாலையில் பெருமளவிலான காயக் காரர் அன்றைய தினம் வந்தார்கள். வருபவர்களுக்கு இயன்றளவு வேகமாக சிகிச்சைகளை



வழங்கி னோம்.

சம்பவத்தில் சிக்கிய சிறுவர்கள், குழந்தைகளில் மூவரைத் தவிர வேறு எவரும் காயப்பட்டோ தண்ணி குடிச்சோ உயிருக்காகப் போராடியபடி வைத்தியசாலைக்கு வரவில்லை. அவர்கள் எல்லோரும் உயிர் பிரிந்த சடலங்களாகத் தான் வந்தார்கள். வைத்தியசாலைக்கு வந்த உடல் களில் அதிகம் பெண்களும், சிறுவர்களும்,

வைத்தியசாலை முழுவதும் ஓடிஓடித்தான் திரிந்தோம்.

ஒரு கட்டத்தில் பதின்மூன்று வயது மதிக்கத்தக்க சிறுமி ஒருத்தியை அவரின் அம்மம்மா தனது தளர்ந்த வயதிலும் இரண்டு கைகளாலும், பத்திரமாய் சுமந்தபடி எங்களிடம் வந்தார்.

அந்த அம்மம்மாவையும் அவர் சுமந்துவந்த பதின்மூன்று வயதுச்சிறுமியையும் பார்க்க எனக்குப் பாவமாய் இருந்தது. அவர் என்னைப் பார்த்தபடி பயந்து பயந்து கிட்ட வந்து "தம்பி, இந்தப்பிள்ளையைக் காப்பாற்றித் தா தம்பி என்ர பேத்தி கனக்கத் தண்ணி குடிச்சிட்டாள் தம்பி, ராசா காப்பாத்தித் தந்திடப்பு" என்று தளதளத்த குரலில் என்னை மன்றாடினார்.

அந்தப் பிள்ளை ஏற்கனவே இறந்துபோய் விட்டது. இப்படி இருக்க எப்படி அதை என்னால் காப்பாற்ற முடியும். அந்த அம்மம்மா என் வாயிலிருந்து வருகின்ற பதிலை எதிர்பார்த்துக்காத்திருந்தார். பிள்ளை செத்து விட்டது எண்டு எப்படிச் சொல்ல முடியும். என்ன பதிலைச் சொல்வது.

அம்மம்மாவை சாந்தப்படுத்துவதற்காய் பிள்ளையைச் சோதித்துப் பார்த்துவிட்டு கஷ்ரம் அம்மா என்று சொல்லிவிட்டேன். இந்த அனுபவம் ஒருபயங்கரமான அனுபவம்.

**அ.லோகீசன்**

வைத்தியத்துறையின் முதல் மருத்துவ அனுபவமே கொடுமையானதாகவும் சோதனை நிறைந்ததாகவும் இருந்தது என்று சுனாமிப் பேரலைகளில் சிக்கி புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை வழங்கிய இளம் மருத்துவர் சத்தியரூபன் தனது வேதனை நிறைந்த அனுபவத்தை எம்முடன் பகிர்ந்து கொண்டார்.

அடுத்த பகுதியில் சுனாமிப் பேரனர்த்தம் இடம் பெற்ற முல்லை நகரின் காட்சிகளை, சோகங்களை, அவலங்களை வீடியோப்படம் பிடிப்பதற்காக அந்தப்பகுதிகளுக்குச்சென்று தனது கமறாவின் வீடியோ நாடாக்களுக்குள் துயரத்தின் துடிப்புக்களை பதிவுசெய்து கொண்டிருந்த தமிழீழ விடுதலைப் புலிக ளின் நிதர்சன நிறுவன மகளிர் போராளி ஒருவர் தனது அனுபவத்தை எங்களிடம் பகிர்ந்து கொண்டார். அவர் பகிர்ந்தவை அடுத் பகுதியில்....

(தொட

## பொதுக்கட்டமைப்பு நிறுவுவதிலிருந்து அரசாங்கம் விலக வேண்டும்

### தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்

அரசாங்கம் வடக்குக் கிழக்கில் நிதி உதவிகளைப் பகிர்ந்தளிப்பதற்காகப் பொதுக்கட்டமைப்பு சபை நிறுவுவதிலிருந்து விலக வேண்டுமென தேசப் பற்றுள்ள தேசிய இயக்கம் அறிவித்துள்ளது.

இந்த இயக்கம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே அது இவ்வாறு கூறியுள்ளது. பொதுக்கட்டமைப்பினால் இலங்கையின் ஒருமைப்பாட்டிற்கும், இறைமைக்கும் அச்சுறுத்தல் ஏற்படுமெனவும் அது அந்த அறிக்கையில் கூறியுள்ளது. இதேவேளை உதவி பகிர்ந்தளிக்கும் பொதுக்கட்டமைப்பு போர் நிறுத்த உடன்படிக்கை மூலம் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பிற்கு சட்ட பூர்வமான நிலையை வழங்குவதற்கான ஆரம்பமெனவும் சர்வதேச சமூகம் தற்போதைய அரசாங்கத்தினூடாக விடுதலைப்புலிகள் அமைப்பிற்கு சர்வதேசக் கடன் உதவிகளை சட்ட ரீதியாகப் பெற்றுக் கொள்ளக்கூடிய நிலைக்கு உயர்த்துவதற்கு முயற்சித்து வருவதாக அந்த இயக்கம் மேலும் கூறியுள்ளது.

பாதிக்கப்பட்டமக்களின் தேவைகளை வழங்குவதற்கு உண்மையான தேவை இருப்பின் இன்றைய நிலையில் அதற்குத் தடை இல்லையென்றும் அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.

ஒன்றிணைந்த கட்டமைப்பை அமைக்கும் செயற்பாடு, மக்களுக்கு தகவல்களை மறைத்துச் சொல்கின்றமை பாரிய விடயமெனவும் இதனால் இது தொடர்பாக நடைபெற்ற பேச்சு வார்த்தைகள் குறித்த தகவல்களையே வெளியிடுமாறும் அந்த இயக்கம் அரசைக் கேட்டுள்ளது.


## தமிழீழ போக்குவரவுக் கழகம்

### சிறப்புப் பேருந்துப் பணி

25.03.2005 ஆம் நாள் நடைபெறும் புளியம்பொக்கணை நாகதம்பிரான் பொங்கல் நாளினை முன்னிட்டு 25.03.2005 - 26.03.2005 ஆகிய இரு நாட்களும் நாயாறு -செம்மலை- அளம்பில்-முல்லைத்தீவு-புதுக்குடியிருப்பு, குமுழமுனை-முள்ளியவளை - புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு-முள்ளிவாய்க்கால்- புதுக்குடியிருப்பு, மாத்தளன்-புதுக்குடியிருப்பு, நெடுங்கேணி-ஒட்டுசுட்டான்-முத்துஐயன்கட்டு-புதுக்குடியிருப்பு, உடையார்கட்டு-விசுவமடு, கிளிநொச்சி-பரந்தன், வட்டக்கச்சி இராமநாதபுரம்-கல்மடு, கந்தபுரம்-கோணாவில் -பரந்தன், வன்னேரி-அக்கராயன்-வட்டக்கச்சி,மல்லாவி-மாங்குளம்-கிளிநொச்சி, நட்டாங்கண்டல்-மல்லாவி-கோட்டைகட்டி-கிளிநொச்சி, புளியங்குளம்-கிளிநொச்சி, வெள்ளாங்குளம்-பூநகரி-பரந்தன், தாளையடி-பரந்தன், முகமாலை-பரந்தன் ஆகிய இடங்களிலிருந்து கோவில்வரை பேருந்துப் பணி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றோம்.

தமிழீழ போக்குவரவுக் கழகம்,
நடுவப்பணிமனை,
விசுவமடு.

(சி.11609)



## ௯௦ ஆம் நாள் நினைவஞ்சலி.....



சின்னத்தம்பி தங்கமலர்
பி.தி 1936-05-10



சின்னத்தம்பி புஸ்பரஞ்சன்
பி.தி 1981-12-19



பொன்ராசா சித்திராதேவி
பி.தி 1971-04-01



பொன்ராசா பிரதிகா
பி.தி 1995-02-14



ஆனந்தராசா கோபிசங்கர்
பி.தி 2000-11-06

இயற்கை அனர்த்தம் ஆழிப்பேரலை 26-12-2004

சி.பவுனன்,
வ.கி.ப.நோ.கூ.ச,
கிளை முகாமையாளர்.

பாசத்தோடு ஒன்றாக வாழ்ந்த எமது இனிய சொந்தங்களே பாரினில் எம்மைத் தவிக்கவிட்டுச் சென்றது ஏனோ கடலன்னையின் தாலாட்டில் இணைந்து வாழ்ந்தோம். கடலன்னையின் கோரத்தால் நாம் பிரிந்தோம். உங்கள் பிள்ளைகள் கண்ணீர்மழை தனில் நனைகின்றோம். மீண்டும் ஒரு தடவை தாலாட்ட வாரும் அம்மா.


தகவல்:-
குடும்பத்தினர்,
உடுத்துறை வடக்கு.

(5785)

## 89 ஆம் நாள் நினைவலைகளில்

26.12.2004 அன்று ஏற்பட்ட ஆழிப் பேரலையின் கோரத்தாண்டவத்துக்குப் பலியான எம் குடும்ப உறவுகளான

## ஆழிப்பேரலையின் அழிப்பில் 26.12.2004



மலர்வு – 05 – 10 – 1940
திரு. துரைச்சாமி கிருஸ்ணபிள்ளை



மலர்வு – 24 – 09 – 1969
திருமதி புவனேந்திரன் பேபிறஞ்சினி



மலர்வு – 10 – 06 – 1960
செல்வி செல்லத்துரை செல்வரஞ்சிதம்



மலர்வு – 04 – 01 – 1994
செல்வி புவனேந்திரன் தர்சினி




மலர்வு – 20 – 08 – 2002
செல்வன் புவனேந்திரன் யதீஸ்



மலர்வு – 12 – 03 – 2004
செல்வி ஜெயசீலன் நிதர்சனா



மலர்வு – 31 – 07 – 1972
திரு. செல்லத்துரை சக்திவேல்



மலர்வு – 8 – 01 – 2000
செல்வன் புவனேந்திரன் தர்சன்

எமது பாச உறவுகளை இந்நாளில் நினைவு கூர்ந்து இவர்களின் ஆத்மசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்

தகவல்:-
குடும்பத்தினர்,வத்திராயன் வடக்கு, தாளையடி

(5867)

## வடக்கு-கிழக்கு மாகாண சுகாதார திணைக்களங்களில் உள்ள துணை மருத்துவ சேவை வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு பயிலுநர்களை ஆட்சேர்த்துக் கொள்ளல்

கீழ்க் குறிக்கப்படும் பயிற்சி நெறிகளின் பொருட்டு பயிலுநர்களை ஆட்சேர்த்துக் கொள்ளும் நிமிர்த்தம் க.பொ.த. (உ/த) பரீட்சையின் (விஞ்ஞான விடயங்கள்) பெறுபேறுகளின் அடிப்படையில் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் அந்தந்த மாவட்டங்களில் குறைந்தது 03 வருடம் தொடர்ச்சியாக வசித்த இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பயிற்சி நெறிகள்**

01) மருந்தாளர்
02) வைத்திய இரசாயனக்கூட தொழில்நுட்பவியலாளர்
03) பௌதீக சிகிச்சையாளர்
04) எக்ஸ் கதிரியக்க தொழில்நுட்பவியலாளர்
05) பொதுசன சுகாதார இரசாயனகூடவியலாளர்
06) மருந்துக் கலவையாளர்

மேலதிக விபரங்களுக்கு அண்மையிலுள்ள சு.வை.அ.பணிமனை வைத்திய நிலையங்கள், பிரதேச செயலகங்கள், மாவட்டச் செயலகம் ஆகியவற்றில் பார்வையிடலாம்.

விண்ணப்பங்களை எமது சுகாதார சேவை திணைக்களத்தில் ரூபா 50/= பெறுமதியான முத்திரையைச் சமர்ப்பித்து விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் யாவும் 2005-04-06ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக (யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்) பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர், 572/3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

**வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன்**
**மாகாண பிரதிப் பணிப்பாளர்,**
**சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்.**

(சி-11610)

## நினைவில் மறையா 90 ஆம் நாள் நினைவலைகள்



ரவிச்சந்திரன்
**கபில்நாத்**



ரவிச்சந்திரன்
**சோமேஸ்வரி**



ரவிச்சந்திரன்
**சோபிகன்**

பிறப்பு

17-06-1996 08.07.1970 11.11.2000

இறைவனின் கரத்தில்:-26.12.2004

காலமெல்லாம் எம்முடனே
களிப்புடனே உறவாடுவீர்கள் என
நினைத்த எமக்கு -காலனாக வந்ததுவோ-
சுனாமி

*25. 03. 2005 வெள்ளிக்கிழமை அம்பலவன் பொக்கணையில் உள்ள எங்கள் இல்லத்தில் நடைபெறும் 90 ஆம் நாள் நினைவு நிகழ்விலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார்,உறவினர்கள், நண்பர்கள்,போராளிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

பிரிவால் துயருறும்
பொ.ரவிச்சந்திரன் (சிவா)
குடும்பத்தினர்.
அம்பலவன்பொக்கணை,
முல்லைத்தீவு.

சிலாவத்தை, முல்லைத்தீவு

(சி.11576)

முதலாம் ஆண்டு

## நீங்காத நினைவலைகள்



## மேஜர் செல்வமதி

தாயின் மடியில் 28.04.1975
தாயக மடியில் 24.03.2004

நிர்சனம்
பணியாளர்கள்,கலைஞர்கள்
போராளிகள்

(சி.5905)

## 90 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 31-05-1970
உதிர்வு 26-12-2004
மலர்வு 25-11-2001



**பாலசுப்பிரமணியம் ரவீந்திரன்**



**ரவீந்திரன் திபானி**

ஓர் கூட்டில் வாழ்ந்துவந்த இரு உறவுகள்
ஊர்கதறப் பிரிந்ததுவோ
பாரினிலே வாழ்வதற்கு காலனுக்குப் பொறுக்கவில்லையோ
உறவுகள் நாம் தேம்புகின்றோம் உம்பிரிவால்
மீண்டுமொருமுறை அவதாரம் கிடைக்காதோ உங்களுக்கு

*26. 12. 2004 அன்று முல்லைத்தீவில் ஏற்பட்ட சுனாமி கடல் அனர்த்தத்தினால் உயிரிழந்த எமது உறவுகளின் இறுதிக்கிரியைகளில் பங்குபற்றியோர், அனுதாபச் செய்திகள் அனுப்பியோர் அனைவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதோடு, 25. 03. 2005 நாளை வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் ,மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

தகவல்,
குடும்பத்தினர்,
7 ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு.

(5810)

## 1 ஆம் ஆண்டு நினைவு நாள்



மலர்வு:-22-10.1980
உதிர்வு:-04.04.2004

ஓராண்டு சென்றாலும்
ஓயாது உன்நினைவு
பாரினிலே பாவை நீ
பலம் இழந்து
பதறடித்துப் போனாயே
காளை அவன் கயிறு
எறிந்து
வீழ்ந்து நீ போனபின்
கத்தி அழுகின்றோம்
காலமெல்லாம் உன்னை
நினைத்து


செல்வி

## இராசலிங்கம் வள்ளிநாயகி

உன்பிரிவை நினைத்து நிற்கும்,
சகோதரி:- யோகராசா சந்திரகுமாரி,
ஊற்றுப்புலம்,கிளிநொச்சி.

(5878)


# பெங்களூரில் பரபரப்பிற்குப் பஞ்சமில்லாத விறுவிறுப்பு டெஸ்ட் இன்று ஆரம்பம்



இந்திய-பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் பெங்களூரில்மூன்றாவது கிரிக்கெட்டெஸ்ட் இன்று தொடங்குகிறது. பாகிஸ்தானுக்கு எதிரான மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 1-0என்றமுன்னிலை வகிக்கிறது. இந்தியா. மொகாலி சமநிலையில் முடிந்தாலும், கொல்கத்தாவில் வெற்றி வசமாகிவிட்டது. கடைசி டெஸ்ட் பெங்களூரில் இன்று தொடங்குகிறது. இதற்காக இரு அணி வீரர்களும் பெங்களூர் சென்று விட்டனர்.

“ஈடன் கார்டன் தோல்வி, ஏமாற்றம் அளிக்கிறது. இங்கு வெற்றி பெற்று தொடரைச் சமன் செய்ய முழு அளவில் போராடுவோம். அணியிலும் சில மாற்றங்கள் இருக்கும். பெங்களூர் வானிலை அருமையாக, குளிர்மையாக இருக்கிறது. எங்கள் ஆட்டமும் நன்றாக இருக்கும்” என்கிறார் 100 ஆவது டெஸ்ட் விளையாடப்போகும் பாகிஸ்தான் தலைவர் இன்சமாம் உல்ஹக். இந்தியாவைப் பொறுத்தவரை அணியில் மாற்றம் எதுவும் இருக்காது. ராகுல் ராவிட், அணில்கும்ளே போன்றவர்களுக்கு இது சொந்த ஊர், ஆகவே, அவர்கள் ஆட்டம் இன்னும் சிறப்பாக இருக்கும். டிக்கெட் விற்பனையும் சூடு பிடிக்கத் தொடங்கி விட்டது. விறுவிறுப்பான கிரிக்கெட் இன்று முதல் ஐந்து நாட்களுக்கு பெங்களூரை அமர்க்களப் படுத்தும்.


# அணியின் வெற்றியே முக்கியம் சாதனைக்காக ஆடவில்லை-சச்சின்



பாகிஸ்தானுக்கு எதிரான தொடரைக் கைப்பற்றுவதுதான் முக்கியம். சாதனை எல்லாம் எனது மனதில் இல்லை. நான் சாதனைக்காக விளையாடவில்லை. நாட்டுக்காக ஆடுகிறேன். அணி வெற்றி பெறவேண்டும் என்பதே எனக்கு முக்கியம். மூன்றாவது டெஸ்டிலும் இந்திய வீரர்கள் சிறப்பாக ஆடுவார்கள். எனது ஆட்டமும் சிறப்பாக இருக்கும். இவ்வாறு டெண்டுல்கர் கூறினார். 34 சதமடித்துள்ள டெண்டுல்கர் 35 ஆவது சதத்தை அடித்து சாதனை படைக்க ஆவலாயுள்ளார்.

பாகிஸ்தானுக்கு எதிரான மொகாலி டெஸ்ட்போட்டியில் 94 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்த டெண்டுல்கர் கொல்கத்தா டெஸ்ட்போட்டியில் 52 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது நடுவரின் தவறான தீர்ப்பால் ஆட்மிழந்து வெளியேறினார்.

# ஹர்பஜன் தூஸ்ரா பந்தை வீசுவார் இன்சமாமுக்கு நூறாவது டெஸ்ட்



“பெங்களூர் டெஸ்டிலும் ஹர்பஜன் தூஸ்ரா முறையில் பந்து வீசுவார் இவரிடம் பந்து வீச்சுப் பாணியை மாற்றும்படி வலியுறுத்தவில்லை.” என்கிறார் இந்திய அணியின் பயற்சியாளர் ஜோன்ரைட். பாகிஸ்தானுக்கு எதிரான கொல்கத்தா டெஸ்டில் ஹர்பஜன் சுழற்பந்து வீச்சுக்குறித்து சர்ச்சை எழுந்தது. இவர் தூஸ்ரா முறையில் வீசும்போது, கையை நிர்ணயிக்கப்பட்ட அளவுக்கு அதிகமாக வளைப்பதாக அம்பயர்கள் புகார் தெரிவித்தனர். இதையடுத்து பெங்களூர் டெஸ்டில் ஹர்பஜன் தூஸ்ராவைக்கைவிட்டு விடுவார் என்று கூறப்பட்டது. இதனை மறுத்த பயிற்சியாளர் ஜோன்ரைட் கூறியதாவது,

ஹர்பஜன் கடந்த போட்டிகளைப் போலவே பெங்களூரிலும் பந்துவீசுவார். இவரது பந்து வீச்சு யுக்திகளில் தூஸ்ரா மிகவும் முக்கியமானது. இவ்வகைப் பந்துகள் வலதுகை துடுப்பாட்ட வீரர்கள் அடிக்க முடியாதபடி விலகிச் செல்லும். இது டெஸ்ட் போட்டிகளில் எதிரணியை திணறடிக்க உதவிக்கரமாக அமையும்.எனவே இவரது பந்து வீச்சுப்பாணியை மாற்றிக் கொள்ளும்படி அறிவுறுத்தப்படமாட்டாது. கப்டன் கங்குலி துடுப்பாட்டத்தில் சாதிக்காதது பெரிய விடயமல்ல. இது கிரிக்கெட் வீரர்களுக்கு சகஜம்தான் பெங்களூரில் இவர் அதிக ஓட்டம் எடுப்பார் என நம்புகிறேன்.

பாகிஸ்தான் அணித்தலைவர் இன்சமாம் பெங்களூரில் 100ஆவது டெஸ்டில் விளையாடுவது சிறப்பான விடயம். இந்த மகத்தான மைல்கல்லை எட்டுவது உண்மையிலேயே சாதனைதான். இப்போட்டியில் இவரை விரைவாக ஆட்டமிழக்கச்செய்வதே அணியின் நோக்கம். இந்திய அணியின் பயிற்சியாளர் பதவியில் இருந்து விலகுவது குறித்து ஏற்கனவே அறிவித்து விட்டேன். இப்போதைக்கு பாகிஸ்தானுக்கு எதிரான தொடரை வெல்வதில்தான் அதிக கவனம் செலுத்துகிறேன் இவ்வாறு ஜோன்ரைட் கூறினார்.

# பெண்கள் உலகக்கிண்ணகிரிக்கெட்; முதல்நாள் ஆட்டங்கள் மழையால் பாதிப்பு

WOMEN'S CRICKET WORLD CUP 2005 SOUTH AFRICA



நேற்று முன்தினம் தென்னாபிரிக்காவின் பிரிடோரியாவில் ஆரம்பமான மகளிர் உலகக் கிண்ணகிரிக்கெட் போட்டியின் முதல் போட்டிகள் நான்கு, மழை குறிக்கிட்டதால் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்ததுடன் அணிக்கு தலா மூன்று புள்ளிகள் வீதம் வழங்கப்படடுள்ளன.

நான்கு போட்டிகளில் ஒன்றான இங்கிலாந்து அவுஸ்திரேலிய மகளிர் அணிகளுக்கு இடையிலான போட்டியில் இங்கிலாந்து 50 ஓவர்களில் ஏழு விக்கெட்டுக்களையிழந்து 169 ஓட்டங்களைப் பெற்றது. ஆரம்ப இணை சிறப்பாக ஆடி 44 ஓட்டங்களைப் பெற்றது. எனினும் பதிலுக்கு துடுப்பெடுத்தாட அவுஸ்திரேலிய அணிக்கு மழைகாரணமாக வாய்ப்புக் கிட்டவில்லை. இதுபோன்று இன்னுமொருபோட்டியில் தென்னாபிரிக்க பெண்கள் அணி ஏழு விக்கெட் இழப்புக்கு



204 ஓட்டங்களைப் பெற்றது. இதனை எதிர்த்து அயர்லாந்து ஆடவிருந்தது.

நியூசிலாந்து ஏழு விக்கெட் இழப்புக்கு 178 ஓட்டங்களையும் சிறிலங்கா 116 ஓட்டங்களையும் பெற்றன. பதிலுக்கு துடுப்பாட இருந்த அணிகளான முறையே மேற்கிந்தியத்தீவுகள் அணியும்,இந்தியாவும் துடுப்பெடுத்தாட மழை இடமளிக்கவில்லை.


இதன் காரணமாக அணிகளுக்குதலா மூன்று புள்ளிகள் வழங்கப்பட்டன.

# பிரசாத் ஓய்வுபெற்றார்



கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வுபெற்றார் பெங்களூரைச் சேர்ந்த சர்வதேச வீரர் வெங்கடேஷ் பிரசாத். ஜவஹல் ஸ்ரீநாத் துடன் இணைந்து 90 ஆம் ஆண்டுகளில் இந்திய அணிக்கு சிறப்பான முன்னேற்றம் தந்த பிரசாத் 33 டெஸ்ட் போட்டிகளில் 96 விக்கெட்டுகளையும், 161 ஒரு நாள் போட்டிகளில் 194 விக்கெட்டுகளையும் கைப்பற்றியுள்ளார்.

# முன்னணி வீரர்கள் இணைக்கப்பட்டால் நான் விளையாடத் தயார்-பிரைன் லாரா



“முன்னணி வீரர்கள் அனைவரும் சேர்த்துக் கொள்ளப்பட்டால் மேற்கிந்தியத்தீவு அணியில் நானும் விளையாடத்தயார்.” என்று பிரைன் லாரா அறிவித்துள்ளார்.

விளம்பரதாரர் பிரச்சினைக்கு மேற்கிந்தியத் தீவும் தப்பவில்லை கிரிக்கெட்சபை அதிகாரபூர்வ ஸ்பான்சர் நிறுவனத்தின் போட்டி நிறுவனத்துடன் விளம்பர ஒப்பந்தம் செய்து கொண்டனர் மேற்கிந்திய வீரர்கள். இதையடுத்து அணியில் இருந்து பிரைன்லாரா, வெய்னே பிரேவோ, பிடல் எட்வர்ட்ஸ், கிறிஸ்கெய்ல், ரவிராம்பால், ராம் நரேஷ் சர்வான் மற்றும் வெய்னே ஸ்மித் ஆகிய ஏழு வீரர்கள் நீக்கப்பட்டனர்.

தென்னாபிரிக்க அணி மேற்கிந்தியத்தீவுக்கு பயணம் சென்றுள்ளது. முதல் டெஸ்ட் 31ஆம் திகதி தொடங்குகிறது இந்தப் போட்டிக்கான அணியில் இணையுமாறு லாராவை மட்டும் அழைக்கிறது மேற்கிந்தியத்தீவு கிரிக்கெட் நிர்வாகம். இந்த அழைப்புக்குப் பதிலளித்து லாரா அனுப்பியுள்ள கடிதத்தில் மேற்கிந்தியத்தீவு கிரிக்கெட் கௌரவத்தை உயர்த்தும் நோக்கிலும், ரசிகர்களின் ஆர்வத்தைக் கெடுக்க விரும்பாததாலும் மீண்டும் அணியில் இணையச் சம்மதிக்கிறேன்.நீக்கப்பட்ட முன்னணி வீரர்களும் இடம்பெறும் அணியில் மட்டுமே நானும் இடம் பெறுவேன்” என்று தெரிவித்துள்ளார்.

# இங்கிலாந்து ஏ அணியை பாகிஸ்தான் ஏ அணி வீழ்த்தியது



கொழும்பில் நடைபெறும் ஏ அணிகள் பங்கு பற்றும் மும்முனை கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து ஏ அணி பாகிஸ்தான் ஏ. அணியிடம் ஐந்து விக்கெட்டுக்களால் தோல்வியடைந்தது.

நேற்று நடைபெற்ற இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 23.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 79 ஓட்டங்களைப் பெற்றது. முதலில் 30 ஓட்டங்களுக்கு எவ்வித விக்கெட்டுக்களையும் இழக்காத போதிலும் மிகுதி 49 ஓட்டங்களில் சகல விக்கெட்டுக்களும் வீழ்த்தப்பட்டன. பாகிஸ்தான் சார்பில் யசிர் அரபாத் 24 ஓட்டங்களைக் கொடுத்து ஆறு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். பின்னர் 80 ஓட்டம் என்ற வெற்றியிலக்கு நோக்கி ஆடிய பாகிஸ்தான் 32 ஓட்டங்களுக்கு நான்கு விக்கட்டுக்களை இழந்திருப்பினும் மிஸ்பாவுல் ஹக் நியாஸ்அப்ரிடி இணையின் சிறப்பான ஆட்டத்தால் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

# மென்பந்து கிரிக்கெட் போட்டி

தமிழீழ மாணவர் எழுச்சிநாளை முன்னிட்டு வடமராட்சி கிழக்கு தமிழ் மாணவர் ஒன்றியத்தால் எதிர்வரும் முதலாம் திகதியன்று 3.30 மணிக்கு யாழ். உடுத்துறை மகாவித்தியாலய மைதானத்தில் மென்பந்து சுற்றுப்போட்டி நிகழ்வானது வடமராட்சி கிழக்கு தமிழ்மாணவர் ஒன்றியத் தலைவர் வி.நிரன்ஜன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

# யாழ் மாவட்ட வி.துறை நடாத்தும் இன்றைய கால்பந்துப் போட்டிகள்

எல்லைப்படை மாவீரர் நினைவாகவும், சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காகவும், தமிழீழ விளையாட்டுத்துறையின் யாழ். மாவட்டப்பிரிவின் ஆதரவுடன் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் நடத்திவரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின் விபரம் வருமாறு;

வலிகாமம் லீக்கைச் சேர்ந்த குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து யாழ்.லீக்கைச் சேர்ந்த சென் மேரிஸ்விளையாட்டுக்கழகம்,




வலிகாமம் லீக்கைச் சேர்ந்த கண்ணகி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து பருத்தித்துறை லீக்கைச்சேர்ந்த சிவானந்தா விளையாட்டுக்கழகம். (14)


# இந்தியக் கிரிக்கெட் அணி செப்ரெம்பர் சிம்பாப்வே பயணம்

இந்தியக் கிரிக்கெட் அணி செப்ரெம்பர் மாதம் சிம்பாப்வே சென்று இரண்டு டெஸ்ட்போட்டியில் விளையாடுகிறது. அத்தோடு மூன்று நாடுகள் போட்டியிலும் பங்கேற்கிறது மூன்றாவது நாடாக நியூசிலாந்து கலந்து கொள்கிறது. இதை சிம்பாப்வே கிரிக்கெட் சங்கம் தெரிவித்தது.

தற்போது இந்திய அணி பாகிஸ்தானுடன் விளையாடி வருகிறது. இந்தத் தொடர் முடிந்த பிறகு இலங்கை அணி இந்தியா சென்று ஐந்து ஒருநாள் போட்டியில் விளையாடுகிறது.



**சியோலில் நடந்த ‘சர்வதேச கால் பந்து போட்டியில்’, அமெரிக்கா 2-1 என்ற கோல் கணக்கில் ஆர்ஜென்டினாவை வீழ்த்தியது. அமெரிக்க வீரர் எடி கேவன் (9) ஆர்ஜென்டினா வீரர் பிரான்கோ மிரண்டா இருவரும் பந்தை தட்டிச் செல்லப் போராடுகின்றனர்.**



## சிந்தனைக்கு

விடுதலை வீரனின் சுயநலமற்ற-பற்றற்ற வாழ்க்கை உன்னதமானது; அர்த்தமானது, சுதந்திரம் என்ற உன்னத இலட்சியத்திற்காக, அவன் தனது உயிரையும் அர்ப்பணிக்கத் துணிகிறான்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 24-03-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## வாரிசு உரிமையாக...!

"ஜே.வி.பி எமது கூட்டமைப்பில் இருந்து விலகினால் எமக்கு அமைச்சர் பதவிகள் கிடைக்காது. பிரதமருக்கும் அதே கதிதான் ஏற்படும். எனவே எமது அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆட்சிக்குள் இருந்து கொண்டு குழிபறிக்க வேண்டாம்" என அமைச்சரும், சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் சகோதரருமான அநுரா பண்டாரநாயக்க சுதந்திரக்கட்சியினருக்குத் தெரிவித்துள்ள ஆலோசனை அவரின் உள்ளக்கிடக்கையின் வெளிப்பாடாகும்.

பண்டாரநாயக்க குடும்பத்தில் துரதிஷ்டம் பிடித்த இளவலாக அடையாளம் காணப்பட்டு வந்த அநுராபண்டாரநாயக்கவிற்கு தற்போதைய அரசாங்கத்தில் அமைச்சுப் பதவி ஒன்று கிடைத்துள்ளது. கடந்த காலத்தில் அவர் சார்ந்திருந்த கட்சி பெரும்பாலும் தேர்தலில் தோல்வியைச் சந்திக்கும் கட்சியாகவே இருந்துள்ளது.

அநுரா பண்டாரநாயக்க எந்தக்கட்சியில் இருக்கின்றாரோ அன்றி ஆதரிக்கின்றாரோ அக்கட்சி அன்றி அந்நபர் தேர்தலில் தோல்வி அடைவது பெரும்பாலும் வழமையாகியிருந்தது. ஆகையினால் அநுரா எப்பக்கம் உள்ளாரோ அதுவே தோற்கும் பக்கமென அரசியல் வட்டாரங்களில் கேலி பேசுவதுகூட வழமையாகியிருந்தது.

ஆனால் இம்முறை அநுரா சார்திருந்த கூட்டணி அறுதிப் பெரும்பான்மை பெறாது போனாலும், சனாதிபதி இக்கூட்டணியைச் சார்ந்தவராக இருந்தமையால் சிறுபான்மை அரசாங்கம் ஒன்றை அமைத்துக் கொள்ள வாய்ப்பு ஏற்பட்டது. இதன் பலனாக அநுரா பண்டாரநாயக்கவிற்கும் ஒரு அமைச்சுப் பதவி தமக்கையின் உபயத்தில் கிடைக்கப்பெற்றது.

இவ்வாறு கிடைக்கப்பெற்ற அமைச்சுப் பதவியை இழப்பதென்பது அநுரா பண்டாரநாயக்கவினால் பொறுத்துக் கொள்ளத்தக்கதொன்றல்லத்தான். ஆகையினால், ஆட்சி கவிழக்கூடிய சூழ்நிலையை யார் ஏற்படுத்தினாலும் அநுரா பண்டாரநாயக்க அவர்கள் மீது சீற்றம் கொள்வது எதிர்பார்க்கத்தக்கதொன்றே. அதிலும் ஜே.வி.பி யினரைக் கூட்டணியிலிருந்து வெளியேற்றுதல் அன்றி அவர்கள் வெளியேறுதல் என்பது அநுரா பண்டாரநாயக்கவால் பொறுத்துக் கொள்ளத்தக்கதாக இல்லை.

ஏனெனில், அநுரா பண்டாரநாயக்க ஜே.வி.பி யினரை நம்பியே தனது அரசியல் எதிர்காலத்திற்கான திட்டத்தை வகுத்துள்ளார். அன்றி சிந்தித்து வருகின்றார். அநுரா பண்டாரநாயக்கவைப் பொறுத்து அவர் ஒரு அமைச்சைப் பொறுப்பேற்பதற்குத் தகுதியானவரோ இல்லையோ ஆனால் அவரின் இலக்கானது பிரதமர், அடுத்து சனாதிபதி பதவிகளே ஆகும். அதாவது வாரிசு உரிமையாக அவை தனக்கே உரியதென அவர் கருதுகிறார்.

இவற்றை அடைவதற்கு ஜே.வி.பி யினரையே அநுரா பண்டாரநாயக்க நம்பியுள்ளார். இம்முறை தேர்தல் முடிவடைந்த பின்னர் கூட அடுத்த பிரதமர் யார் என்ற வினா எழுந்தபோது அநுரா பண்டாரநாயக்கவிற்கு ஆதரவளிப்பதற்கு ஜே.வி.பி. தயாராக இருந்தது. தற்பொழுதும் ஜே.வி.பி யினரின் ஆதரவு அநுராவிற்கு உண்டு. இதனைக் கொண்டே எதிர்காலத்திலும் ஜே.வி.பி யின் ஆதரவுடன் சனாதிபதித் தேர்தலில் சுதந்திரக் கட்சி வேட்பாளராகப் போட்டியிடுவது என்ற நோக்கில் அநுரா செயற்பட்டு வருகின்றார்.

இந்நிலையில், ஜே.வி.பி யினரை அரசாங்கத்தில் இருந்து வெளியேற்றுவது அன்றி வெளியேறும் வகையிலான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் என்பதை அநுரா பண்டாரநாயக்கவினால் எவ்வாறு சகித்துக் கொள்ள முடியும்? ஜே.வி.பியை வெளியேற்றுவது என்பது அநுரா பண்டாரநாயக்கவை அரசாங்கத்தில் இருந்து வெளியேற்றுவதாக அல்லவா அர்த்தம் கொள்ளப்படும்.

இதன் காரணமாகவே கூட்டமைப்பில் இருந்து ஜே.வி.பி.யை வெளியேற்றுவதற்கு எதிராக அநுரா பண்டாரநாயக்க கூச்சலிட்டுள்ளார். ஜே.வி.பி. வெளியேறின் ஆட்சி அதிகாரமும், அமைச்சுப் பதவிகளும் பறிபோய்விடுமென வெட்கத்தைவிட்டு புலம்பியுள்ளார். அத்தோடு, சுதந்திரக் கட்சியினருக்கும் பதவிகள் பறிபோய்விடும் எனவும் எச்சரித்துள்ளார்.

ஆனால், அநுரா தனது எதிர்காலக் கனவுகளைக் கலைக்கும் செயல்களுக்கு எதிராகக் கூச்சல் இடுவது குறித்து எவரும் ஆச்சரியம் கொள்ளவில்லை. ஆனால், அநுரா பண்டாரநாயக்க ஜே.வி.பி யின் திட்டத்தினை விளங்கிக் கொள்ளாமை குறித்துத்தான் ஒரு புறத்தில் கவலையும், மறுபுறத்தில் அநுரா மீது அனுதாபமும் கொண்டுள்ளனர்.

சுருக்கமாகக் கூறுவதானால், ஜே.வி.பி. சனாதிபதிப் பதவியைத் தங்கத் தாம்பாளத்தில் வைத்துத் தன்னிடம் வழங்கும் என்ற அநுராவின் எதிர்பார்க்கையையிட்டுத்தான் அவர்கள் கவலை கொண்டுள்ளனர். அதாவது அநுரா பண்டாரநாயக்க இத்தனை அடி முட்டாளா என்று அவர்கள் ஆதங்கம் கொள்கின்றனர்.

# சுனாமியின் பின்னான புனரமைப்பு தாமதமடைந்து செல்கின்றது

### சுனாமியின் ஆலோசகர் மனோ தித்தவல

சுனாமியின் பின்னான புனரமைப்புகள் தாமதமடைந்துள்ளதாக சனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் மனோ தித்தவல தெரிவித்துள்ளார்.

நிதியுதவி வழங்கும் நாடுகளும், உதவி நிறுவனங்களும் இன்னமும் தமது திட்டங்கள் குறித்து பேச்சுவார்த்தைகளை நடத்திக்கொண்டிருக்கின்றன. இந்த நிலையில் அரசாங்கம் கடந்த சனவரியில் பரிந்துரை செய்த மீள்கட்டுமான திட்டத்திற்கு இன்னமும் நிதியுதவி செய்யும் நாடுகள் அங்கீகாரம் வழங்கவில்லையென அவர் குறிப்பிட்டார்.

நேற்று இரவு கொழும்பில் நடைபெற்ற ஊடக மாநாட்டில் உரையாற்றிய அவர் ஆழிப்பேரலையின் பின்னரான புனரமைப்புகளுக்காக சிறிலங்கா அரசாங்கம் 1.8 பில்லியன் டொலர்களை செலவிட மதிப்பிட்டுள்ளது.

இன்னமும் ஆழிப்பேரலையின் காரணமாகப் பாதிக்கப்பட்ட ஐந்து இலட்சம் பேர் அகதிகளாக வாழ்கின்றனர். 40 ஆயிரம் பேர் இறந்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில் ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட வீடுகளை மீள அமைக்க ஒன்பது மாதங்கள் வரை செல்லும் எனத் தெரிவித்த அவர், பாதைகளை திருத்தியமைக்க மூன்று வருடங்கள் வரை செல்லும் எனக் குறிப்பிட்டார்.

இதேவேளை இங்கு உரையாற்றிய நிதியமைச்சின் செயலர் ஜெயசுந்தர நாடு தற்சமயம் பாரிய நிதி நெருக்கடியை எதிர்நோக்கு வதாகத் தெரிவித்தார்.

### -காலியில் சுனாமியால் பாதிக்கப்பட்டோர்-

# பாவனைக்கு உதவாத பொருட்களை வழங்கியமைக்கு எதிராகப் போராட்டம்

காலியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் நேற்று ஈடுபட்டுள்ளனர்.

பாவனைக்கு உதவாத நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளமை வெளிநாடுகளிலிருந்து காலிநகரசபைக்கு அனுப்பியிருக்கின்ற சுனாமி நிவாரணங்களில் பாவனைக்கு உதவாத நிலையில் இருந்த பொருட்களை வழங்கியுள்ளனர். இவ் உடுதுணிகளை மாநகர சபை முன்பாக வைத்து தீயிட்டுள்ளனர். பாவிக்கக் கூடியநிலையில் இருந்த நிவாரணப் பொருட்களை மாநகரசபை ஊழியர்களுக்கு வழங்கியதாக அவர்கள் காலி மாநகர சபை ஆணையாளர் மீது குற்றம் சாட்டியுள்ளனர்.

# இந்திய இஸ்லாமிய மார்க்க அறிஞர் நாடுகடத்தப்பட்டமைக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

### -கொடும்பாவிகளும் எரிப்பு

கடந்த இருவார காலமாக இலங்கையில் தங்கியிருந்த தென்னிந்தியாவைச் சேர்ந்த இஸ்லாமிய மார்க்க அறிஞரான மௌலவி பி.ஜெயினுலாப்தீன் குடிவரவு, குடியகல்வு திணைக்கள அதிகாரிகளினால் நேற்று அதிகாலை நாடு கடத்தப்பட்டுள்ளார்.

இவர் இலங்கையில் தங்கியிருந்த காலத்தில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் பல்வேறு பிரதேசங்களுக்குச் சென்று இஸ்லாமிய மாநாடுகளில் கலந்து கொண்டதோடு, மார்க்கப் பிரச்சார நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வந்தார். நேற்று முன்தினம் மாலை கொழும்பு மருதானை எல்பின்ஸ்டன் மண்டபத்தில் இவரது நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருந்தபோது அங்கு பிரவேசித்த மற்றுமொரு இஸ்லாமிய குழுவொன்று வன்முறையில் ஈடுபட்டது. இதன் காரணமாக ஏற்பாட்டாளர்கள் இருவர் காயமடைந்தனர். இந்த சம்பவம் இடம்பெற்றுக் கொண்டிருந்த நேரத்தில் அங்கு வந்த பொலிசாரினால் இவர் கைது செய்யப்பட்டு நாடு கடத்தப்பட்டார். இவர் நாடு கடத்தப்பட்டமைக்கு மேல்மாகாண ஆளுநரும் சனாதிபதியின் முஸ்லிம் விவகார ஆலோசகருமான அலவி மௌலானா பின்னணியில் இருந்ததாகவும், அவரது அரசியல் செல்வாக்கே இதற்குப் பயன்படுத்தப்பட்டதாகவும் குற்றம் சாட்டப்படுகிறது. இந்நாடு கடத்தலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று மட்டக்களப்பு காத்தான்குடிப் பிரதேச முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

காத்தான்குடி மெத்தைப் பள்ளிவாசல் முன்றலிலிருந்து புறப்பட்ட நூற்றுக்கணக்கான முஸ்லிம்கள் பிரதான வீதிகள் ஊடாக பிரதேச செயலகத்தைச் சென்றடைந்தனர். இவ் ஆர்ப்பாட்டத்தில் மேல்மாகாண ஆளுநர் அலவி மௌலானா, கொழும்பைச் சேர்ந்த மௌலவி நியாஸ், காத்தான்குடியைச் சேர்ந்த மௌலவி ஏ.எல்.ஜஹறியா ஆகியோரின் கொடும்பாவிகளும் எடுத்துச் செல்லப்பட்டன.இந்த மார்க்க அறிஞர் நாடு கடத்தப்பட்டமைக்கும் அதற்கு பின்னணியில் இருந்து செயற்பட்டதாகக் கூறப்படும் மேற்குறிப்பிட்ட பிரமுகர்களுக்கு எதிராகவும் வாசக அட்டைகளை ஏந்தியவாறு கோசங்கள் எழுப்பப்பட்டன.பிரதேச செயலக முன்றலை சென்றடைந்த இந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் பிரதேச செயலாளர் ஏ.எல்.எம்.பளீலிடம் சிறிலங்கா சனாதிபதிக்கான மனுவொன்றைக் கையளித்தனர். இதன் பின்பு குறிப்பிட்ட மூன்று கொடும்பாவிகளையும் தீயிட்டு எரித்தனர்.

# குற்றங்களை நிரூபிக்க குருதி மாதிரிகளை பரிசோதித்துப்பெற சட்டத்திருத்தம்

குற்றச்செயல் மீதான புலன் விசாரணைகளுக்காக குருதியின் மாதிரியைப் பெற்று டி.என்.ஏ. சோதனைகளை நடத்த குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை திருத்தச் சட்ட மூலத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக நீதி சட்ட மறுசீரமைப்பு அமைச்சர் ஜோன் செனவிரத்ன தெரிவித்தார். இலகுவான முறையிலும், செலவு குறைந்த முறையிலும் குற்றங்களை நிரூபிக்க டி.என்.ஏ. சோதனை உதவும் என்றும் அவர் தெரிவித்தார்.

குற்றச் செயல் மீதான புலன் விசாரணைகளுக்காக இதுவரை காலமும் குற்றம் சுமத்தப்பட்டவரிடமிருந்து உமிழ்நீர், சிறுநீர், தலைமயிர் மற்றும் விரல் நகத்தின் மாதிரியைப் பெற்றுக் கொள்ளலாமென இருந்த சட்டத்தில் இனிமேல் குருதியின் மாதிரிகளையும் பெற்றுக் கொள்ளலாம் என்ற வகையில் திருத்தப்படவுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக் கோவை திருத்தச் சட்ட மூலம் மீதான விவாதத்தில் உரை நிகழ்த்திய அவர் மேலும் தெரிவிக்கையில்:-

முன்னைய ஆண்டுகளை விட கடத்தல் சம்பவங்கள் எட்டு சதவீதத்தினால் அதிகரித்துள்ளன. கொள்ளைச் சம்பவங்கள் 23.3 சதவீதத்தினாலும், பாலியல் துஷ்பிரயோகங்கள் 10.8 சதவீதத்தினாலும், மோசடி மற்றும் போலி ஆவணங்கள் தொடர்பான குற்றங்கள் 28.8 சதவீதத்தினாலும், பெண்கள், சிறுவர்கள் துன்புறுத்தல்கள் 31.1 சதவீதத்தினாலும் அதிகரித்துள்ளன.

இதனால் குற்றம் தொடர்பான புலன் விசாரணைகளை இலகுவாக்கும் வகையிலும், அதிகாரிகளுக்கு அதிக அதிகாரம் வழங்கும் வகையிலும் குற்றவியல் நடவடிக்கை சட்டக்கோவையில் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன.

மேலும் இத்திருத்தங்களின்படி இதுவரை காலமும் நீதவான் நீதிமன்றம் விதிக்கக்கூடிய ஆகக் கூடிய தண்டப்பணம் 500 ரூபா, இனி ஒரு லட்சமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

அடுத்து நீதிமன்ற விசாரணைகளில் ஏற்படும் கால தாமதத்தைத் தவிர்க்கும் வகையில் மேல் நீதிமன்றத்தில் மேற்கொள்ளப்படும் குறித்த வழக்கின் விசாரணைகளை இயன்றளவு சாத்தியமான வகையில், நாளாந்தம் நடத்துவதற்கு ஏற்ற வகையில் திருத்தங்கள் சமர்ப்பிக்கப்படுகின்றன.

நாட்டில் குற்றச் செயல்களின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு காரணம் சட்டச் செயற்பாடுகளின் காலதாமதமும், சட்டத்தை நடைமுறைப்படுத்தும் பொலிஸ் திணைக்களத்தில் காணப்படும் குறைபாடுகளுமே எனலாம்.

ஆயுதப்படையில் இணைந்து பயிற்சி பெறுபவர்கள் பின்னர் படையில் இருந்து தப்பியோடி சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுகின்றனர். நாட்டில் இடம்பெறும் குற்றச் செயல்களுக்கு இவர்கள்தான் பெரும் காரணம்.

விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியில் புதிய வகையிலான ஆயுதங்கள், துப்பாக்கிகள் பாவிக்கப்படுகின்றன. இவற்றினால் குற்றச் செயல்களில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால்தான் சட்டத்தை அமுல்படுத்தும் அதிகாரிகளுக்கு அதிக அதிகாரம் வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது என்றார்.

# வடமராட்சி கிழக்கில் வெவ்வேறு இடங்களில் 220 தற்காலிக வீடுகள் கையளிப்பு

சுனாமி அனர்த்தத்தினால் இடம்பெயர்ந்த வடமராட்சி கிழக்கு மக்களுக்கென வெவ்வேறு இடங்களில் அமைக்கப்பட்ட 220 வீடுகள் நேற்று கையளிக்கப்பட்டன.

மருதங்கேணி, அரசடிவீதி வத்திராயன், வாரிவட்டம் வத்திராயன் ஆகிய மூன்று இடங்களிலும் அமைக்கப்பட்ட தற்காலிக குடியிருப்புக்களே நேற்று மக்களிடம் கையளிக்கப்பட்டன.


இக்கையளிப்பு நிகழ்வின் முதற்கட்டமாக காலை 9.00 மணியளவில் மருதங்கேணியில் அமைக்கப்பட்ட



60 வீடுகள் கையளிக்கப்பட்டன. இந் நிகழ்விற்கு மருதங்கேணி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை ஆசிரியர் த.செல்வகுமார் தலைமை தாங்கினார். பொதுச்சுடர்களை கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சிவநாத் , என்.பி.ஏ நிறுவன பிரதிநிதி ஸ்கீம், கிராமக் குழுத்தலைவர் செல்வக்குமார்,தமிழீழ கடற்படைகட்டளை அதிகாரி செஞ்சேரன் ஆகியோர் ஏற்றிவைத்தனர். சிறப்புரையினை ஏ.எஸ்.பி. நிறுவன பிரதிநிதி நிகழ்த்த, தொடர்ந்து இக் குடியிருப்பில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் அமைக்கப்பெற்ற 25 வீடுகளில் ஒன்றை வடமராட்சி கிழக்கு செயலணிக்குழுவைச்சேர்ந்த சுடர் மணி கையளித்தார்.

தொடர்ந்து என்.பி.எ/எ.எஸ்.பி நிறுவனத்தினரால் அமைக்கப்பெற்ற 35 வீடுகளில் ஒன்றை என்.பி.எ/எ.எஸ்.பி நிறுவன பிரதிநிதி மார்டீன் கையளித்தார்.

இதனையடுத்து பிற்பகல் 4.மணியளவில் வத்திராயன் வாரி வட்டமெனுமிடத்தில் தமிழர்புனர்வாழ்வுக் கழகத்தினரால் அமைக்கப்பெற்ற 25 வீடுகளைக் கையளிக்கும் நிகழ்வு கிராம அலுவலர் பாலசுந்தரம் தலைமையில் ஆரம்பமானது. இதில் பொதுச்சுடர் ஏற்றலைத் தொடர்ந்து சிறப்புரைகளை வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் ஜெயசீலன், உதவி அரசாங்க அதிபர் செயலக திட்டமிடல் அலுவலர் ஈஸ்வரபாதம்,தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்த சுடர் ஆகியோர் நிகழ்த்தினர். வீடுகளை தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தைச் சேர்ந்த சுடர் கையளித்தார்.



தொடர்ந்து 5.00 மணியளவில் அரசடி வீதி, வத்திராயன் எனுமிடத்தில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினரால் அமைக்கப்பெற்ற 25 வீடுகளையும் என்.பி.எ/எ.எஸ்.பி நிறுவனத்தினரால் அமைக்கப்பெற்ற 110 வீடுகளும் கையளிக்கும் நிகழ்வின் பொதுச்சுடரேற்றலைத் தொடர்ந்து சிறப்புரையினை தமிழீழ திட்டமிடலும் மேம்பாட்டுக்குமான செயலக பதில் பணிப்பாளர் ரஞ்சன் என்.பி.எ/எ.எஸ்.பி நிறுவன பிரதிநிதி ஜேம்ஸ் மார்டீன் நிகழ்த்த, தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினரால் அமைக்கப்பெற்ற வீடுகளை தமிழர்புனர்வாழ்வுக்கழக பிரதிப்பணிப்பாளர் றீகன் கையளித்தார். தொடர்ந்து என்.பி.எ/எ.எஸ்.பி நிறுவனத்தினரால் அமைத்த வீடுகளை அந் நிறுவனப் பிரதிநிதி கையளித்தார். இந் நிகழ்விற்கு கிராமசேவகர் பாலசுந்தரம் தலைமை தாங்கினார்.

இம் மூன்று குடியிருப்புக்களை கையளிக்கும் நிகழ்வுகளிலும் பொதுமக்கள், போராளிகள், துறைசார் பொறுப்பாளர்கள், அரசஅரசசார்பற்றநிறுவனப் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ச,தீ)

## -சிதம்பரபுரத்தில் மூன்று எலும்புக் கூடுகள் மீட்புக்குறித்து-

# முதற்கட்ட விசாரணை நேற்று நீதிமன்றில் ஆரம்பம்

(வவுனியா செய்தியாளர்)

சிதம்பரபுரத்தில் மூன்று எலும்புக்கூடுகள் மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பான முதலாம் கட்ட விசாரணை நேற்று வவுனியா நீதவான் நீதிமன்றில் ஆரம்ப மானது.

சிதம்பரபுரத்தில் மலக்குழி ஒன்றிலிருந்து ஒரு எலும்புக்கூடு உட்பட மூன்று எலும்கூடுகள் மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் மூவர் பொலிசாரல் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் கடந்த எட்டு மாதங்களாக சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர். இம் மூவரும் ஆட்கொலை செய்ததாக வவுனியா பொலிசாரால்' குற்றம் சாட்டப்பட்டு வவுனியா நீதவான் நீதிமன்றில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பான வழக்கு விசாரணை நேற்று வவுனியா நீதவான் நீதிமன்றில் நடைபெற்றது. கொலை செய்யப்பட்ட பின் மலக் குழியினுள் போடப்பட்ட பவானி (வயது-16) என்ற பெண்ணின் சகோதரி நீதிமன்றில் தோன்றி கொலை செய்யப்பட்ட பெண்ணிடம் இருந்து பெறப்பட்ட தடயப் பொருட்களான குடை, செருப்பு, ஆடைகள் என்பவற்றை அடையாளம் காட்டி கொலை செய்யப் பட்டவர் தனது சகோதரி எனக் கூறினார்.

இது தொடர்பான விசாரணையை மேற்கொண்ட வவுனியா நீதவான் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் வழக்கு விசாரணையை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (10)

# குலசிறி உடுகம் பொல கைதானார்

கண்டி முன்னாள் பொலிஸ் அதிகாரி குலசிறி உடுகம்பொல நேற்றுக்கைது செய்யப்பட்டார். கொழும்பில் இருந்து சென்ற விசேட பொலிஸ் குழவினரால் அவர் கைது செய்யப்பட்டார்.

மிலேனியம் சிட்டி ஆயுதங் களஞ்சியம் பரிசோதனை உட்பட்ட ஐந்து குற்றச்சாட்டுகள் தொடர்பிலேயே அவர் கைது செய்யப்பட்டார். இதன் பின்னர் கண்டி நீதிமன்ற நீதவான் முன்னிலையில ஆஜர் செய்யப்பட்ட போது அவரை ஐந்து இலட்சம்ரூபா சரீரப் பிணையில் செல்ல நீதவான் உத்தரவிட்டார். (32)

# கிளி.மாவட்ட வைத்தியசாலையில் பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது. மேற்படி பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை எதிர்வரும் 26 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு கிளி.மாவட்டவைத்தியசாலையில் நடைபெறவுள்ளதால் சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டியுள்ளவர்கள் வைத்தியசாலை நிர்வாகத்திடம் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளும் வண்ணம் கிளிநொச்சி மாவட்ட வைத்தியஅதிகாரி வேண்டியுள்ளார். (சோ)

# வவுனியாவில் பாண் விலை இன்று முதல் 18 ரூபாவாக அதிகரிப்பு

(வவுனியா செய்தியாளர்)

வவுனியாவில் இன்று தொடக்கம் 450 கிராம் பாண் ஒன்றின் விலை 18ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

நேற்று மாலை 4.00மணிக்கு வவுனியா அரச செயலக மாநாட்டு மண்டபத்தில் வவுனியா அரச அதிபர் சண்முகம் தலைமையில் நடைபெற்ற வெதுப்பக உரிமையாளர்களின் பிரச்சினை தொடர்பாக ஆராயும் கூட்டத்திலேயே இத்தீர்மானம்மேற்கொள்ளப்பட்டுள்ளது. இக்கூட்டத்தில் வவுனியா நகர சபை செயலாளர் .சரவணபவன், வவுனியா வர்த்தக சங்கத்தலைவர் ஜனாப், பி.எஸ். அப்துல்லா நுகர்வோர் சங்கப் பிரதிநிதிகள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது 450 கிராம் பாண் ஒன்றின் விலை 18ரூபாவாகவும், விசேட பாண் ஒன்றின் விலை 22 ரூபாவாகவும் அதிகரிப்பதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது. (10)

## வடமராட்சி...

படையினரால் அமுல்படுத்தப்படுகிறது இதற்கு எதிர்ப்பு[illegible]வித்தும், உயர்பாதுகாப்பு வலயம் காரணமாக வலிவடக்கிலிருந்து இடம்பெயர்ந்த மீனவக்குடும்பங்களை மீளக் குடியமரவோ அல்லது அருகிலுள்ள சூனியப்பிரதேசங்களில் குடியேற அனுமதிக்கக்கோரியும் இப்போராட்டத்தினில் வலியுறுத்தப்படவுள்ளது. (27)

## மாணவர்கள்....

காலங்களில் யாழ்.நகரப்பகுதியினில் இடம் பெற்ற கண்டனப் பேரணிகளில் பாடசாலை மாணவ, மாணவிகள் சீருடையுடன் பாடசாலை நேரத்தில் கலந்து கொண்டமை தொடர்பாகவே அக்கடிதத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது. பாடசாலைகள் சிலவற்றினது பெயர் கள் பிரஸ்தாபிக்கப்பட்டு, அப்பாடசாலை மாண வர்களே இப் பேரணியில் கலந்து கொண்டதாக குறிப்பிட்டு அக் கடிதத்தில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

எனினும் இது தொடர்பாக பதிலளித்த கல்வித்திணைக்கள யாழ். பணிமனைஅதிகாரி யொருவர்"படை அதிகாரிகளிற்கு எல்லாம் விளக்கமளிக்க வேண்டிய நிலையில் நாங்கள் இல்லைஎன்றார்". குறிப்பாக புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னரான காலப்பகுதியினில் இவ்வாறான குற்றச்சாட்டுக்களை படைத் தலைமை தொடர்ந்தும் எழுப்பி வருவதாகவும் அவர் மேலும் விபரித்தார்.

இவ் விடயத்தினில் கல்வி அமைச்சு விள்க்கங்களைக் கோருமாயின், அதற்கான விளக்கத்தை அளிக்க தாம் தயாராக இருப்பதாக கூறிய அவ்வதிகாரி படைத்தரப்பு அரச நிர்வாகங்களில் தலையிடுவதை அனுமதிக்க முடியாது எனவும் தெரிவித்தார். (27)

## இளைஞன்....

மேற்கொள்ள வேண்டும் பாதிக்கப்பட்ட இளைஞனை இராணுவம் கொண்டுசெல்லகூடாதுபோன்ற கோரிக்கைகளை முன்வைத்து மக்கள் இராணுவத்தினருக்கு எதிராக கோசங்களை எழுப்பினார்கள். இதனையடுத்து அங்கு சென்ற போ.நி.க குழுவினர் மக்களிடம் விசாரணை மேற்கொண்டனர். இதேவேளை நேற்றுமாலை போ.நி.க குழுவினரை சந்தித்த வவுனியா மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் ஞானவேல் இதற்கு கடுமையான தனது ஆட்சேபனையினை தெரிவித்துள்ளார். களத்திற்கு சென்று விசாரணை மேற்கொண்ட வவுனியா மாவட்ட போர்நிறுத்த கண்காணிப்புகுழுவின் பொறுப்பாளர் வுல்ட் ஜேர்போ இந்தச் சம்பவம் தொடர்பாக இராணுவத்தினருக்கு தனது அதிருப்தியை வெளியிட்டிருப்பதாகவும் இது தொடர்பாக தான் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்ததாக வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ஞானவேல் தெரிவித்தார். (21)

## அரசியலமைப்பு...

நேரம் சனாதிபதி ஒரு உறுப்பினரை இந்தச் சபைக்கு நியமிக்கலாம். இதற்கு மேலதிகமாக சிறுபான்மை கட்சிகள் ஒரு உறுப்பினரை பரிந்துரை செய்யலாம் என்ற நியமம் வகுக்கப்பட்டுள்ளது. (32)


# ௯0 ஆம்நாள் நினைவஞ்சலி

## கந்தசாமி நாகேஸ்வரி (மலர்)

பிறப்பு:-20-10-1950 இறப்பு:-26-12-2004

25.03.2005 (வெள்ளிக்கிழமை) சிவபுரம் கிராஞ்சியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் 90 ஆம் நாள் நினைவஞ்சலி நிகழ்விலும் மதியபோசனத்திலும் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறேன்.

(5877)

தகவல்:-க. சிவகுமார்,
சிவநகர்,உருத்திரபுரம்



# 31 ஆம் நாள் நினைவலைகளும், அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பிதழும்



அன்புடையீர்!

23.02.2005 புதன்கிழமை மாலை 5 மணியளவில் சிவப்பேறடைந்த எங்கள் பேரன்புக்கும் வணக்கத்துக்குமுரிய தந்தையார்

## உயர் திரு.வே.க.ஏரம்பு

அவர்களின் வீட்டுக்கிருத்தியம் 25.03.2005 வெள்ளிக்கிழமை தூயவன் அரசறிவியுல் கல்லூரியில் நடைபெறும். அவ்வமையம் தாங்கள் சுற்றஞ்சூழ வருகை தந்து எமது தந்தையாரின் ஆன்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம். தனிப்பட்ட அழைப்புக்கள் அனுப்ப முடியாமைக்கு வருந்துகிறோம். இவ்வழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்குமாறு அனைத்து அன்புள்ளங்களையும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இங்ஙனம்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(சி.11574)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது